வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 பக்கங்கள் : 16 விலை ரூ. 20/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

30.01.2021 சனிக்கிழமை






05 தேசிய அளவில் தடுப்பூசிகள் அடுத்த மாதம் வழங்கப்படும்



10 ஐ.நா. அறிக்கை ஒருதலைப் பட்சமானது



13 இலங்கை வீரர்களின் ஊதியம் குறைகிறது



14 எம்மவர்களும் இராணுவ பயிற்சி பெறவேண்டும்

## முழு பாராளுமன்றத்தையும் அரசமைப்பு சபையாக்குக!

### அனைவரின் ஆதரவையும் பெற அரசுக்கு எதிர்க்கட்சி ஆலோசனை

கொழும்பு, ஜன.30

புதிய அரசமைப்புக்கு அனைத்து இன மக்களது மற்றும் கட்சிகளது ஆதரவு தேவை என்றால் முழு பாராளுமன்றத்தையும் அரசமைப்பு சபையாக மாற்ற வேண்டும். அரசாங்கம் இவ்வாறு செயல்படுமாக இருந்தால் ஐக்கிய மக்கள் சக்தி புதிய அர

02

# இலங்கையில் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கு புதிய தீர்மானம்

### மனித உரிமைகள் பேரவை உறுப்பு நாடுகளிடம் மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்து




ஜெனிவா, ஜனவரி 30

இலங்கையில் தற்போது மோசமடைந்துவரும் மனித உரிமைகள் நிலவரம் தொடர்பில் கண்காணிப்பதற்கும் கடந்த காலத்தில் இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல்களுக்கான பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கும் ஏற்ற வகையிலான புதியதொரு தீர்மானத்தை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகள் ஒன்றிணைந்து நிறைவேற்றவேண்டும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

02

## அறிக்கையை கவனமாக ஆராய்கிறது அமெரிக்கா!




வொஷிங்டன், ஜன. 30

இலங்கையின் எதிர்காலம் உரிமைகளை மதித்து, கடந்த காலத்தை சமாளிக்க அர்த்தமுள்ள நடவடிக்கைகளை எடுப்

02

சட்டவிரோதமாக மேற்கொள்ளப்பட்ட

## மின்சார இணைப்பில் சிக்கி குடும்பஸ்தர்கள் இருவர் பலி

### மன்னாரில் துயரச் சம்பவம்



மன்னார், ஜன.30

மன்னார் - யாழ்ப்பாணம் பிரதான வீதி, திருக்கேதீஸ்வரம் மாளிகைத்திடல் கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள பிரதான வீதிக்கு அருகில் மின்சாரம் தாக்கி உயிரி

02

## தமிழினத்தின் உரிமைகளை வென்றெடுக்க ஒன்றிணைக!

### சாணக்கியன் எம்.பி. அழைப்பு

மட்டக்களப்பு, ஜன.30

இலங்கைக்கு சுதந்திரம் ஆங்கிலேயரால் கிடைத்த போதிலும் இங்கு வாழும் பூர்வீகக் குடிகளான தமிழ் இனத்துக்கு இன்று வரை

02

## வடக்குக்கு 11ஆயிரத்து 80 கொரோனா தடுப்பூசிகள்

### ஏற்றும் திட்டம் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜன.30

வடக்கு மாகாண வைத்திய சாலைகள் மூலம் மருத்துவ சேவையாளர்கள் உள்ளிட்ட சுகாதாரத் துறையினருக்கு வழங்குவதற்கு 11 ஆயிரத்து 80 கொரோனா தடுப்பூசி மருந்துகள்

02



## இஸ்ரேல் தூதரகம் அருகே டில்லியில் குண்டுவெடிப்பு!

### பொலிஸார் குவிப்பு

டில்லி,ஜன.30

டில்லியில் உள்ள இஸ்ரேல் தூதரகம் அருகே குண்டு வெடித்ததில் மூன்று கார்கள் சேதமடைந்தன. நகரின் மையப்பகுதியிலுள்ள ஓரங்கசீப் வீதி ஓரத்தில் இந்த வெடிப்புச் சம்பவம் நிகழ்ந்துள்ளது என டில்லி பொலிஸார் தெரிவித்

02

## நேற்று முதல் நாளிலேயே 5,286 பேருக்கு தடுப்பூசி!



கொழும்பு,ஜன.30

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட கொரோனா தடுப்பூசி நேற்று முதல் நாளிலேயே 5 ஆயிரத்து 286 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது என சுகாதார அமைச்சின் தொற்று

02

## ஜெனிவாவில் பெரும் சவாலை இலங்கை எதிர்கொள்ள நேரிடும்



### ஐக்கிய மக்கள் சக்தி எச்சரிக்கை

கொழும்பு, ஜன.30

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை பெரும் சவாலை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்பது ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரால் வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையிலிருந்து தெளிவாகின்றது. எனவே அரசாங்கம் இந்த அறிக்கையை ஆழமாக ஆராய்ந்து, உரியவாறான பிரதிபலிப்பை எதிர்வரும் ஜெனிவா கூட்டத்தொடரில் வெளிப்படுத்த

02

## மின்சார...

பூந்த குடும்பஸ்தர்கள் இருவரின் சடலங்களை நேற்றுக் காலை மன்னார் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் அடம்பன் பள்ளிவாசல் பிட்டிப்பகுதியைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான மூக்கையா மகேந்திரன் (வயது-45) மற்றும் வேட்டையார் முறிப்புப் பகுதியைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான அந்தோனிப்பிள்ளை தேவசங்கர் (வயது-37) ஆகியோரே உயிரிழந்தனர்.

திருக்கேதீஸ்வரம் மாளிகைத்திடல் கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள பிரதான வீதிக்கு அருகிலுள்ள மின் கம்பத்திலிருந்து சட்ட விரோதமான முறையில் மின்சார இணைப்பைப் பெற்று, வீதிக்கு சற்று தொலைவில் காட்டு விலங்குகளை வேட்டையாடுவதற்காக அமைத்திருந்த மின் இணைப்பில் சிக்கியே இந்த இருவரும் உயிரிழந்தனர் என பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

நேற்றுக் காலை இந்த இருவரும் உயிரிழந்த நிலையில் காணப்பட்டதை அவதானித்த பிரதேசவாசிகள், மன்னார் பொலிஸாருக்குத் தகவல் வழங்கிய நிலையில் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்றுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து இலங்கை மின்சார சபை அதிகாரிகளும் சம்பவ இடத்துக்கு வருகைதந்து மின் இணைப்பைத் துண்டித்த பின்னரே சடலங்களை பொலிஸார் மீட்டுள்ளனர். (அ-எ)

## நேற்று முதல்...

நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, கொரோனா தடுப்பு நடவடிக்கைகளில் சுகாதார ஊழியர்கள் மற்றும் பிற முன்னணி ஊழியர்கள் உற்சாகமாகக் கலந்துகொண்டனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன் இதுவரை கொரோனா தடுப்பூசியால் பக்கவிளைவுகள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப் பெறவில்லை.

இதேவேளை இன்று நாடு முழுவதும் இந்தத் திட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாகவும் சுகாதாரத் துறையினர் மற்றும் பிற முன்னணி ஊழியர்களுக்கு இந்தத் தடுப்பூசி முதல்கட்டத்தில் வழங்கப்படும் என்றும் தேசிய தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது. (அ-எ)

## முழு பாராளுமன்ற...

சமைப்பு தயாரிப்புக்கு ஒத்துழைக்கும் என எதிர்க்கட்சி பிரதம கொறடா பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

புதிய அரசமைப்பு தயாரிப்புக்காக அரசாங்கம் மேற்கொண்டுவரும் நடவடிக்கைக்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் ஒத்துழைப்பு தொடர்பில் வினவியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

புதிய அரசமைப்பு தயாரிப்புக்காக அரசாங்கம் புதிய குழுவொன்றை நியமித்திருக்கின்றது. இந்தக் குழுவுக்கு மக்களின் கருத்துக்களை வழங்க முடியும் என அரசாங்கம் அறிவித்திருக்கின்றது.

ஐக்கிய மக்கள் சக்தியின் யோசனைகளையும் வழங்குமாறு எமக்கு அறிவித்திருந்தது. இதுதொடர்பில் நாங்கள் கலந்துரையாடி வருகின்றோம்.

அத்துடன் அரசாங்கத்துக்கு நெருக்கமான சட்டத்தரணிகளைக்கொண்ட குழுவை நியமித்து அரசமைப்பொன்றை தயாரிக்க முடியாது என்பதே எமது நிலைப்பாடு.

நியமிக்கப்பட்டிருக்கும் சட்டத்தரணிகள் தொடர்பில் எமக்கு பிரச்னை இல்லை. என்றாலும் புதிய அரசமைப்பொன்றை தயாரிப்பதாக இருந்தால், நாட்டில் இருக்கும் அனைத்து இன மக்கள் மற்றும் அனைத்து அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைத்துக்கொண்டு இந்த நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும்.

அனைத்து இன மக்களது மற்றும் கட்சிகளது ஆதரவு தேவை என்றால் முழுப் பாராளுமன்றத்தையும் அரசமைப்பு சபையாக அமைக்கவேண்டும்.

ஏனெனில் பாராளுமன்றத்தில் அனைத்து இன மக்கள் பிரதிநிதிகள் இருக்கின்றனர். அனைத்துக் கட்சிகளும் இருக்கின்றன. அரசாங்கம் இவ்வாறு செயல்படுமாக இருந்தால் ஐக்கிய மக்கள் சக்தி புதிய அரசமைப்பு தயாரிப்புக்கு சம்பந்தப்படும்.

அத்துடன் அரசாங்கத்தின் புதிய அரசமைப்பு நடவடிக்கை தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் நிலைப்பாட்டை கடிதம் ஒன்றின் மூலம் தெளிவாக அரசாங்கத்துக்கு அறிவித்திருக்கின்றது.

அனைத்து இன மக்கள் மற்றும் அனைத்துக் கட்சிகளின் ஆதரவில்லாமல் தயாரிக்கப்படும் அரசமைப்பினூடாக பிரச்னைகளுக்குத் தீர்வு காணமுடியாது.

இதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட இரண்டு அரசமைப்பு தொடர்பாகவும் விமர்சனங்கள் வருவதற்கு காரணமாக இருந்தது, சிறுபான்மை மக்களின் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளத் தவறியமையாகும். அந்தத் தவறை மீண்டும் செய்யக்கூடாது- என்றார். (அ-எ)

## வடக்குக்கு...

கிடைத்துள்ளன என மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடக்கு மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் மருத்துவர்கள், தாதியர்கள், மருத்துவ சேவையாளர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் ஊழியர்களுக்கு கொரோனா தடுப்பூசி மருந்து ஏற்றும் பணி இன்று முதல் மூன்று நாள்களுக்கு முன்னெடுக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு 5 ஆயிரத்து 820 மருந்துகளும், கிளிநொச்சி மாவட்டத்துக்கு ஆயிரத்து 160 மருந்துகளும், முல்லைத்தீவு மாவட்டத்துக்கு ஆயிரத்து 300 மருந்துகளும், வவுனியா மாவட்டத்துக்கு ஆயிரத்து 700 மருந்துகளும், மன்னார் மாவட்டத்துக்கு ஆயிரத்து 800 தடுப்பூசி மருந்துகளும் கோரப்பட்ட நிலையில் அவை முழுமையாக சுகாதார அமைச்சால் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை, யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்களுக்கும் தடுப்பூசி கோரப்பட்ட நிலையில், அவை தனித் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் என சுகாதார அமைச்சால் அறிவிக்கப்பட்டுள்ளது-என்றார். (அ-எ)

## அறிக்கையை...

பதைப் பொறுத்தே அமையும் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இலங்கை தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் அமைப்பின் அறிக்கை குறித்து அமெரிக்க வெளியுறவுத்துறையின் செய்தித் தொடர்பாளர் நெட் பிரைஸ் தனது டுவிட்டர் பதிவிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அத்துடன் அந்த டுவிட்டர் பதிவில், இலங்கையில் மனித உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையை நாங்கள் கவனமாக பரிசீலித்து வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## இஸ்ரேல்...

நிகழ்ந்துள்ளது என டில்லி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் குண்டு வெடிப்பு நேற்று மாலை 5 மணியளவில் இடம்பெற்றதுடன் சம்பவ இடத்துக்கு உடனடியாக தீயணைப்புப் படையினர், ஸ்வாட் மற்றும் தடயவியல் குழுவினர் விரைந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, இந்தக் குண்டு வெடிப்பில் யாருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் இந்தப் பகுதியில் பெருமளவு பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். (அ-எ)

## இலங்கையில்...

இலங்கை தொடர்பான ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட்டின் அறிக்கை உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டதை அடுத்து மனித உரிமைகள் பேரவையால் நேற்று வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

எதிர்வரும் பெப்ரவரி மாதம் ஆரம்பமாகவுள்ள ஜெனிவா கூட்டத்தொடரின் போது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை, அதன் ஆணையாளர் மிச்செல் பச்லெட்டினால் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளுக்கு அமைவாக செயலாற்றுவது அவசியமாகும்.

இலங்கையில் தற்போது மோசமடைந்துவரும் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் கண்காணிப்பதற்கும் கடந்த காலத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்கான பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கும் ஏற்றவகையிலான புதியதொரு தீர்மானத்தை ஐ.நா. மனித உரிமைகள் பேரவை நிறைவேற்ற வேண்டும்.

இலங்கையில் மோசமடைந்துவரும் மனித உரிமைகள் நிலைவரம் பெரும் விசனத்தை ஏற்படுத்தியிருப்பதாகவும், எதிர்காலத்தில் அதிகரிக்கக் கூடிய மீறல்களை எதிர்கொள்வதற்கு ஏற்ற நடவடிக்கைகளை மனித உரிமைகள் பேரவை எடுக்கவேண்டும் என்றும் ஆணையாளர் மிச்சேல் பச்லெட்டின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நீதி, பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் ஆகியவற்றை உறுதிசெய்யும் வகையில் 2015 ஆம் ஆண்டில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திலிருந்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் விலகுவதாக அறிவித்ததுடன் அடிப்படை மனித உரிமைகளை நிலைநாட்டுவதிலும் பொதுவான புறக்கணிப்பை வெளிப்படுத்தியது.

இவ்வாறானதொரு பின்னணியில் சர்வதேச சட்டங்களுக்கு முரணான குற்றங்கள் மற்றும் மீறல்களினால் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாக்கும் வகையில் மனித உரிமைகள் பேரவை செயல்படவேண்டும்.

இதுவிடயத்தில் உரிய நடவடிக்கையை மேற்கொள்வதற்கென ஐ.நா மனித உரிமைகள் பேரவையினால் இலங்கைக்குப் பல தடவைகள் வாய்ப்பு வழங்கப்பட்டது.

இந்நிலையில் தற்போது மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்களையும் வலுவற்ற குழுக்களையும் பாதுகாப்பதற்கு சர்வதேசத்தின் பங்களிப்பு மிகவும் முக்கியமானதாக மாறியிருக்கிறது.

கடந்த 2009 மேமாதம் முடிவிற்கு வந்த இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான போரின்போது இருதரப்புமே பாரிய மீறல்களைப் புரிந்ததுடன் அதன்விளைவாகப் பெரும் எண்ணிக்கையான பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

இவை போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமைகளுக்கு எதிரான குற்றங்களாகும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் விசாரணையாளர்களால் இனங்காணப்பட்டது.

எனினும் கடந்த 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலின் ஊடாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வருகையைத் தொடர்ந்து மேற்படி மனித உரிமை மீறல்களுடன் தொடர்புபட்டிருப்பதாகக் குற்றம்சாட்டப்பட்ட பல உயர் அதிகாரிகள் மீண்டும் அரசாங்கத்துக்குள் உள்வாங்கப்பட்டனர்.

இவை தொடர்பில் விசாரணை செய்வதற்காகக் கடந்த காலங்களில் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்களால் கண்டறியப்பட்ட விடயங்கள் மற்றும் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் தொடர்பில் ஆராய்வதற்காக கடந்த 21 ஆம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டது.

எனினும் கடந்த காலங்களில் பல்வேறு ஆணைக்குழுக்கள் ஸ்தாபிக்கப்பட்டிருந்தாலும், அவை உண்மையைக் கண்டறிவதிலிருந்தும் பொறுப்புக்கூறலை நிலைநாட்டுவதிலிருந்தும் தவறியிருக்கின்றன என்று ஆணையாளர் மிச்செல் பச்லெட்டின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையின் தற்போதைய நிலைவரம் தொடர்பில் எவ்வித சந்தேகங்களுக்கும் இடமளிக்காத வகையிலான மிகத்தெளிவான அறிக்கையொன்றையே ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட் முன்வைத்திருக்கின்றார்.

ஆகவே ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உறுப்புநாடுகள் ஒன்றிணைந்து இலங்கையில் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாப்பதற்கும் நீதியையும் பொறுப்புக்கூறலையும் உறுதிசெய்வதற்கும் ஏற்றவாறான வலுவானதொரு புதிய தீர்மானத்தை நிறைவேற்றுவது அவசியமாகும்-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ)

## ஜெனிவாவில்...

வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க அறிவுறுத்தியுள்ளார். ஐ.நா. ஆணையாளரின் அறிக்கை தொடர்பில் வினவியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையில் கூறப்பட்டுள்ள விடயங்களை நோக்குகையில் எதிர்வரவுள்ள ஜெனிவா கூட்டத்தொடரில் இலங்கை பெரும் சவாலை எதிர்கொள்ள வேண்டியேற்படும் என்றே தோன்றுகின்றது.

எனவே சர்வதேசத்தின் மத்தியில் ஏனைய நாடுகளின் உதவியின்றி எம்மால் தனித்துப் பயணிக்க முடியாது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். - என்றார். (அ-எ)

## இஸ்ரேல்...

தனர்.

இந்தக் குண்டு வெடிப்பு நேற்று மாலை 5 மணியளவில் இடம்பெற்றதுடன் சம்பவ இடத்துக்கு உடனடியாக தீயணைப்புப் படையினர், ஸ்வாட் மற்றும் தடயவியல் குழுவினர் விரைந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை இந்தக் குண்டு வெடிப்பில் யாருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் இந்தப் பகுதியில் பெருமளவு பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். (அ-எ)

## தமிழினத்தின்...

சுதந்திரம் கிடைக்கவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தமிழர்களுக்கான உரிமையை வென்றெடுக்க உலக நாடுகள் வரை எம் தமிழர்களின் குரல் எழவேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுதந்திர தினத்தன்று முன்னெடுக்கப்படவுள்ள போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து நேற்று அவர் வெளியிட்டுள்ள விசேட அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். (அ-எ)

## மல்லிகையை...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

தன்னோடு நின்று கதைப்போரிடம் தமக்கே உரிய புன்முறுவலுடன் மனந்திறந்து டொமினிக் ஜீவா பேச்சுக்கொடுப்பது, அவரது இலக்கியத்துறைசார்ந்த ஆளுமையை வெளிப்படுத்துவதாக இருக்கும்.

டொமினிக் ஜீவாவின் இலக்கிய ஆளுமை என்பது பன்முகத்தன்மை கொண்டது. பிரபல்யமான தென்னிலங்கை சிங்கள, முஸ்லிம் இலக்கியவாதிகளது படைப்புக்களையும் அவரது மல்லிகை சஞ்சிகை தாங்கிவந்து, தமிழ் இலக்கியத்துறையில் வடக்கிற்கும் தெற்கிற்குமிடையே மல்லிகை இலக்கிய வடிவில் பாலம் அமைத்தது என்றால் அது மிகையாகாது.

Eelanadu
30.01.2021 சனிக்கிழமை
சார்வரி, தை 17

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

e-mail: editor@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# 'போராட்டம்' என்பது ஒரு கனதியான சொல்

'பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையில்' - என்னும் சுலோகத்தின்கீழ், சிவில் சமூக குழுக்களின் சாத்வீக போராட்டத்திற்கான அழைப்பை தமிழ் கட்சிகள் வரவேற்றிருக்கின்றன. மார்ச் மாதம் நெருங்கும் வேளையில் இலங்கையின் மனித உரிமைகள் விவகாரம் சூடுபிடித்திருக்கின்றது. ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் அறிக்கையைத் தொடர்ந்து அரசாங்கம் ஜெனிவாவை எதிர்கொள்வதற்கான தயார்படுத்தல்களில் ஈடுபட்டுவருகின்றது. இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தியே சிவில் சமூக அமைப்புக்கள் இவ்வாறானதோர் அழைப்பை விடுத்திருக்கின்றன. ஆனால், இவ்வாறான அழைப்புக்கள் கடந்த காலத்தில் பெரியளவில் வெற்றியளிக்கவில்லை. ஏனெனில், வடக்கு, கிழக்கில் சிவில் சமூக அமைப்புக்கள் ஒப்பீட்டிப்படையில் பலமாக இல்லை.

அதேவேளை, 'எழுக தமிழ்' போன்ற செயல்பாடுகள் சிவில் சமூக அமைப்புக்களை அதிகம் அரசியல் கட்சி மயப்படுத்தியிருந்தன. அதேவேளை வடக்கு, கிழக்கில் இடம்பெறும் எந்தவொரு போராட்ட நடவடிக்கையிலும் ஒரு குறிப்பிட்ட குழுவினரே மீண்டும், மீண்டும் பங்குகொள்கின்றனர். உதாரணமாக, வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் போராட்டங்களில் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களையும், ஒரு குறிப்பிட்ட அரசியல் தரப்பினரையும் தவிர, பொதுமக்கள் எவரையும் காணமுடிவதில்லை. மக்கள் திரட்சியாக பங்குகொள்ளவதில்லை. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான், போராட்டங்களுக்கான அழைப்புக்கள் கடந்த காலத்தில் பெரியளவில் வெற்றியளிக்கவில்லை. அதிலும் குறிப்பாக, கொரானாவிற்கு பின்னரான சூழலில், இவ்வாறான வெகுசன போராட்டங்களுக்கான இடைவெளிகள் மேலும் சுருங்கியிருக்கின்றன.

போராட்டங்களுக்கான அழைப்பை விடுப்பவர்கள் இவ்வாறான புறநிலைமைகளை கருத்தில்கொள்ள வேண்டும். அல்லது, புதிய அணுகுமுறைகள் தொடர்பில் சிந்திக்க வேண்டும். ஜெனிவா அமர்வை கருத்தில் கொண்டு அவசரமாக மேற்கொள்ளப்படும் இவ்வாறான நடவடிக்கைகள் தமிழர் தரப்பின் பலவீனங்களுக்கான சான்றிதழை வழங்கிவிடக் கூடாது. வடக்கு, கிழக்கு தமிழ் மக்களை பொறுத்தவரையில் வெகுசன போராட்டங்களில் பங்குகொள்ளும் நிலையில் இல்லை. கடந்த இரண்டு தசாப்தகால அனுபவங்களில் சிந்தித்தால், பெருந்தொகையான பொது மக்கள், ஒரு வெகுசன போராட்டத்திற்காக திரண்டார்கள் என்றால், அது விடுதலைப் புலிகள் காலத்தில் இடம்பெற்ற 'பொங்குதமிழ்' நிகழ்வுகளில் மட்டும்தான். அதற்கு பின்னர் அவ்வாறானதொரு வெகுசன திரட்சியை எங்குமே இதுவரையில் காணமுடியவில்லை. பொங்கு தமிழை பிரதிசெய்யும் வகையில்தான் 'எழுக தமிழ்' நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தன. ஆனால், அது பெரியளவில் வெற்றிபெற்றிருக்கவில்லை. ஆனாலும் அண்மைக்காலத்தில் குறிப்பிட்டளவான பொது மக்கள் பங்குகொண்ட ஒரு நிகழ்வாக எழுக தமிழ் அமைந்திருந்தது உண்மை. ஆனால், எழுக தமிழ் நிகழ்வுகளுக்கு பின்னால் மாற்றுத் தலைமையொன்றை கட்டியெழுப்ப வேண்டுமென்னும் எண்ணம் வேர்கொண்டிருந்து. இதன் காரணமாகவே கூட்டமைப்பு அதனை நிராகரித்திருந்தது. ஒருவகையில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் விக்னேஸ்வரன் ஆகியோரின் தேர்தல் வெற்றிக்கு பின்னால் இவ்வாறான செயற்பாடுகள் கணிசமாக செல்வாக்குச் செலுத்தியிருந்ததன.

போராட்டம் என்பது மிகவும் கனதியான ஒரு சொல் - அந்தச் சொல் கொண்டு செயற்பட விரும்புவர்கள் ஆகக் குறைந்தளவாவது, அந்தச் சொல்லின் கனதிக்கு ஏற்ப மக்களை அணிதிரட்டவேண்டும். ஜெனிவாவை கருத்தில் கொண்டு அவசரமாக மேற்கொள்ளப்படும் இவ்வாறான நடவடிக்கைகள் இறுதியில் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்திவிடக் கூடாது. போராட்டத்தின் முடிவில், இது அரசியல் நோக்கம்கொண்ட, ஒரு சிறு குழுவின் நடவடிக்கை என்பதான காட்சி தென்பட்டுவிடக் கூடாது. பொதுமக்களை அணிதிரட்டிக்கொள்ள முடியாத சந்தர்ப்பங்களில் அமைதியாக இருப்பதே மேலானது.

# மல்லிகையை தனது கையால் கோத்த டொமினிக் ஜீவா!

**- அனந்த பாலகிட்ணர் -**

*'ஈழநாடு' பத்திரிகை நிறுவனம் வெறுமனே பத்திரிகையாளர்களின் அலுவலகமாக மட்டும் இருக்கவில்லை. யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரக் கல்லூரிக்கு அருகாமையில் மானிப்பாய் வீதியில் எழுத்தாளர்கள், கவிஞர்கள், பல்கலைக்கழகம் சார்ந்தோர் என, பல்துறை சார்ந்த அறிவுபூர்வமான, அதேசமயம் சுவாரஸ்யமான பேர்வழிகள் சங்கமிக்கின்ற ஓர் அறிவாலய மாகவும் ஈழநாடு பத்திரிகைக் காரியாலயம் விளங்கியிருந்தது.*

*1981ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஈழநாடு பத்திரிகையில் சேர்ந்த காலப்பகுதியில் எனது மூத்த பத்திரிகையாளர்களைச் சந்திக்க பல்துறை சார்ந்தவர்களும் வருவதும், அவர்கள் பலதரப்பட்ட விடயங்களைப்பேசி மகிழ்வதும் கேட்டு ரசிப்பதற்கு சுவாரஸ்யமாகவே இருக்கும். ஈழநாட்டில் எனது காலப்பகுதியில் நான் சந்தித்த இலக்கியவாதிகளில் முக்கியமானவரே ஈழத்தமிழ் இலக்கியத்துறையில் தனக்கென ஒரு முக்கிய இடத்தைவகித்து, தற்போது எம்மைவிட்டுப் பிரிந்துள்ள 'மல்லிகை' ஆசிரியர் டொமினிக் ஜீவா என்பது குறிப்பிடத்தக்கது.*

*எண்பதுகளின் மத்திய காலப்பகுதிவரை இந்திய சஞ்சிகைகளின் ஆக்கிரமிப்பு ஈழத்து வாசகர்களைப் பெரிதும் கவர்ந்ததாக இருந்தது. கல்கி, ஆனந்தவிகடன், குமுதம் என, தமிழகத்தின் ஜனரஞ்சக சஞ்சிகைகள் யாழ்ப்பாணக் குடாநாட்டில் அனைவரது இல்லங்களிலும் எப்போதும் காணப்படுபவையாகவே இருக்கும்.*

**மல்லிகை - சிரித்திரன்**

*எனவே, அன்றைய காலகட்டத்தில் யாழ். மண்ணில் சஞ்சிகைகளைக் கொண்டுவர வேண்டுமென பலர் முன்வந்திருந்தனர். சிலர் சிலகாலம் சில சஞ்சிகைகளை வெளியிட்டுமிருந்தனர். ஆயினும், எத்தகைய இடர்பாடுகளுக்கு மத்தியிலும், இருவர் மட்டுமே சளைக்காது யாழ். மண்ணிலிருந்து தமது சஞ்சிகைகளைத் தொடர்ந்து வெளிவரச் செய்தனர். அவர்களில் ஒருவர் மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா. மற்றையவர், 'சிரித்திரன்' ஆசிரியர் ஆர். சிவஞானசுந்தரம்.*

*யாழ்ப்பாண மண்ணைப் பொறுத்தவரை இந்த இருவருமே ஊடக மற்றும் கலை, இலக்கிய வட்டத்தினராலும் இன்றைய சந்ததி ஊடகவியலாளர்கள், இலக்கியவாதிகளாலும் எப்போதுமே மனதில் நிலைநிறுத்தப்பட வேண்டியவர்களாக இருக்கின்றனர்.*

**கணனிகளின் அறிமுகம்**

*இன்று ஊடகத்துறையினரை மட்டுமல்ல. ஏனைய இலக்கியத்துறை சார்ந்தவர்களையும் எடுத்துக்கொள்வோமேயானால், கணணிகள் அவர்களது பணிகளுக்கு கைகொடுத்து நிற்கின்றன.*

*ஆனால், மல்லிகையை டொமினிக் ஜீவாவும், சிரித்திரனை ஆர். சிவஞானசுந்தரமும் வெளிக்கொண்டுவந்திருந்த காலப் பகுதியில் கைகளால் அச்சுக்கோக்கின்ற முறையே காணப்பட்டிருந்தது. ஈழநாடு பத்திரிகைகூட அன்று கைகளால் அச்சுக் கோக்கப்பட்டே வெளிவந்திருந்ததுடன், செய்தித்துறையின் சூக்குமங்களை சிரேஷ்ட பத்திரிகையாளர்களிடம் கற்றிருந்தவேளை, நல்ல எழுத்துத் தமிழை இளம் பத்திரிகையாளர்கள் ஈழநாடு அச்சுக்கோப்பவர்களிடமும் கற்றுக்கொண்டிருந்தனர்.*

*இவ்வகையில், மல்லிகை ஆசிரியர் தனது கைப்பட அச்சுக்கோத்து, மிக அழகிய இலக்கிய நூலாக மல்லிகை சஞ்சிகையை வெளிக்கொணர்ந்திருந்தார்.*

*மல்லிகை சஞ்சிகை மாதந்தோறும் வெளியாகியதும் அதன் ஒரு பிரதியை ஈழநாடு காரியாலயத்திற்கு வந்து, ஆசிரியர் பீடத்திலும் டொமினிக் ஜீவா தந்துவிட்டு போவார். இவரது நண்பர்களாக ஆசிரிய பீடத்திலிருந்த மூத்த பத்திரிகையாளர்கள் காணப்பட்டதோடு, மனந்திறந்து இலக்கியம் மற்றும் ஏனைய ஜனரஞ்சக விடயங்களை டொமினிக் ஜீவாவோடு சுவாரஸ்யமாக பகிர்ந்துகொள்வார்கள்.*

*டொமினிக் ஜீவாவினுடைய மல்லிகை அலுவலகம், யாழ்ப்பாணம் ராஜா திரையரங்கின் ஓரமாக செல்கின்ற சிறு ஒழுங்கையிலேயே அமைந்திருந்தது. இந்த சிறிய அச்சுக்கூடத்துடன்கூடிய தனது அலுவலகத்திலிருந்தே, மிகப் பொறுமையோடு தனது மல்லிகை சஞ்சிகைக்குரிய விடயங்களை அச்சுக்கோத்து, பதிவிடுவதற்காக தயாராகிக் கொண்டிருப்பார் டொமினிக் ஜீவா.*

**ஜீவாவின் ஆளுமை**

*மல்லிகையின் ஆசிரியராக மாத்திரமல்லாமல், அந்த சஞ்சிகையின் அச்சுக்கோப்பாளராகவும், விநியோகஸ்தராகவும் அவர் பணியாற்றியவிதம் மிகவும் சிறப்பானதாகவே இருந்தது. மல்லிகை சஞ்சிகை வெளியானதும், அமைதியாக அந்த சஞ்சிகைகளை தமது வாசகர்களுக்கு கொடுப்பதற்காக விநியோகஸ்தர்களிடம் கொண்டு செல்வார். டொமினிக் ஜீவாவை அவரது மல்லிகை சஞ்சிகைகளோடு அடிக்கடி காணக்கூடிய இடம், யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்திற்கு அருகே அமைந்திருக்கின்ற பழமையும், பிரபலமும் வாய்ந்த பூபாலசிங்கம் புத்தகசாலை என்பது குறிப்பிடத்தக்கது.*

*இங்கே, டொமினிக் ஜீவாவை சூழவர எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், இலக்கியவாதிகள் மற்றும் அவரது தனிப்பட்ட அபிமானிகள் என்று ஒரு சிறுகூட்டமே நிற்பதைக் காணமுடியும்.* *(02ஆம் பக்கம் பார்க்க)*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



# யாழ்.நெடுந்தூர பஸ் நிலையத்தில் தமிழ்மொழிக்கு உரிய முதலிடம்

## மாற்றும் பணி நேற்று ஆரம்பம்



யாழ்ப்பாணம், ஜன. 30

யாழ்ப்பாணம் நெடுந்தூர பஸ் நிலையத்தின் தரிப்பிடப் பலகையில் தமிழ்மொழியை முதலாவதாக மாற்றும் பணி மாநகர சபையால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகர முதல்வர், சட்டத்தரணி வி.மணிவண்ணனின் பணிப்புக்கு அமைய உள்ளூர் அச்சக நிறுவனம் ஒன்றின் ஊடாக தரிப்பிடப் பலகைகள் சீரமைக்கப்படுகின்றன.

யாழ்ப்பாணம் நெடுந்தூர பஸ் நிலையத்தின் தரிப்பிடம் புதிதாக அமைக்கப்பட்டு கடந்த புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

அங்கு ஒவ்வொரு மாவட்ட பஸ்கள் தரித்து நிற்கும் இடங்களைக் குறிக்கும் காட்சிப் பலகைகளில் சிங்களமொழி முதலிலும் தமிழ்மொழி இரண்டாவதாகவும் இடம்பெற்றமை சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது.

அது தொடர்பில் யாழ்ப்பாணம் மாநகர முதல்வரின் அறிவுறுத்தலில் உள்ளூர் அச்சகம் ஒன்றின் ஊடாக தரிப்பிடப் பலகைகளைச் சீர்செய்ய சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

தரிப்பிடப் பலகையில் தமிழ்மொழி முதலிலும் சிங்கள மொழி இரண்டாவதாகவும் இடம்பெறும் வகையில் சீரமைக்கப்பட்ட பலகை ஒன்று நேற்று முதல்வரிடம் கையளிக்கப்பட்டது.

அதனையடுத்து அனைத்து பலகைகளும் அகற்றப்பட்டு சீரமைத்து சில தினங்களுக்குள் மீளவும் பொருத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.



# தடுப்பூசி குறித்து அச்சம் வேண்டாம்

## மருத்துவர் ஆனந்த விஜேவிக்ரம தெரிவிப்பு

கொழும்பு,ஜன. 30

**தடுப்பூசி குறித்து எவ்வித அச்சமும்கொள்ள தேவையில்லை என தேசிய தொற்று நோய்களுக்கான நிறுவனத்தின் மருத்துவ நிபுணர் மருத்துவர் ஆனந்த விஜேவிக்ரம தெரிவித்துள்ளார்.**

முதல் மருத்துவ அதிகாரியாக, இந்திய கொவிஷீல்ட் தடுப்பூசி பெற்றுக்கொண்டதை அடுத்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தடுப்பூசி குறித்த அனைத்து தகவல்களையும் ஆராய்ச்சிகளையும் துல்லியமாக ஆய்வு செய்ததைத் தொடர்ந்தே தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு அனுமதி வழங்கியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தத் தடுப்பூசி பாதுகாப்பானது என குறிப்பிட்ட மருத்துவர் ஆனந்த விஜேவிக்ரம, இந்த தடுப்பூசி வழங்கும் நடவடிக்கையால் மக்களின் வாழ்க்கை இயல்பு நிலைக்கு திரும்பும் என எதிர்பார்ப்பதாகவும் கூறினார்.

(அ)




**மேடம்**
மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள். ஆரோக்கியத்தில் ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் அகலும். குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**இடபம்**
கவலைகள் தீரும் நாள். எடுத்த காரியத்தில் எளிதில் சிந்தித்து முடிப்பீர்கள். சகோதர வழியில் சந்தோஷம் தரும் செய்தியொன்று வந்து சேரும்.

**மிதுனம்**
முயற்சியில் வெற்றி கிடைக்கும் நாள். திடீர் பயணத்தால் திரவிய லாபம் உண்டு. சான்றோர்களின் சந்திப்பு கிட்டும். எதிர்பார்த்த காரியம் முடிடையும்.

**கடகம்**
செல்வாக்கு மேலோங்கும் நாள். திறமை பளிச்சிடும். உடல் நலம் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள். அரசியல்வாதிகளால் அனுகூலம் உண்டு.

**சிம்மம்**
மனஅழுத்தம் மாறும் நாள்.தொழில் வளர்ச்சி திருப்தி தரும். பிள்ளைகள் வழியில் நல்ல தகவல் உண்டு. புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**கன்னி**
விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டிய நாள். வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். வாகன பராமரிப்பில் ஆர்வம் ஏற்படும்.

**துலாம்**
ஆரோக்கியம் சீராகும் நாள். ஆதரவுகரம் நீட்டுபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். சகோதர சச்சரவுகள் மாறும்.

**விருட்சிகம்**
காரிய வெற்றிக்கு வழிபட வேண்டிய நாள். காலை நேரத்திலேயே காதினிக்கும் செய்தி வந்து சேரும். வருமானம் திருப்திகரமாக இருக்கும்.

**தனுசு**
நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டிய நாள். நிச்சயித்த செயலில் மாற்றம் ஏற்படும். பிள்ளைகளின் வழியில் திடீர் செலவுகளைச் சந்திக்க நேரிடலாம்.

**மகரம்**
கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றி மகிழும் நாள். நீண்ட நாளாக நிறைவேறாத காரியமொன்று இன்று நிறைவேறும்.

**கும்பம்**
எடுத்த செயல்கள் இனிதே நிறை வேறும் நாள். பணத்தேவைகள் பூர்த்தியாகும். நினைத்ததை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள்.

**மீனம்**
சந்தோஷங்கள் வந்து சேரும் நாள். தனவரவு திருப்தி தரும். பொருளாதார முன் னேற்றம் கருதி பூமி விற்பனையில் ஆர்வம் காட்டுவீர்கள்.

# மார்ச்சிலிருந்து பொலிஸாருக்கு பதவியுயர்வு

கொழும்பு, ஜன. 30

உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள் முதல் அதற்கு குறைந்த தரத்தில் உள்ள பொலிஸ் அதிகாரிகளுக்கு பதவியுயர்வு எதிர்வரும் மார்ச் மாதம் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டது.

(அ)

# உயர்குருதியமுக்க சிகிச்சை நிலையம் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஜன. 30

யாழ்ப்பாணம் உயர் குருதி அமுக்க சிகிச்சை நிலையம் போதனா வைத்தியசாலையில் நேற்று திறந்துவைக்கப்பட்டது.

யாழ். போதனா வைத்தியசாலையின் விக்டோரியா வீதியில் உள்ள புதிய கிளினிக் கட்டடத் தொகுதியில் இந்த சிகிச்சை நிலையம் நேற்று வெள்ளிக்கிழமை நண்பகல் திறந்து வைக்கப்பட்டது.

இருதய சிகிச்சை வல்லுநர் பூ.லக்ஸ்மன் இந்த சிகிச்சை நிலையத்தை சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைத்தார்.

யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி, சிகிச்சை நிலையத்தின் முதல் பணிப்பாளர் பொது மருத்துவ வல்லுநர் பேராசிரியர் தி.குமணன் மற்றும் துறைசார் மருத்துவ வல்லுநர்கள், மருத்துவர்கள் இந்த ஆரம்ப நிகழ்வில் பங்கேற்றனர்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மருத்துவப் பிரிவு, யாழ்.போதனா வைத்தியசாலை இருதய சிகிச்சைப் பிரிவு, சிறுநீரக சிகிச்சைப் பிரிவு, அகஞ்சுரக்கும் தொகுதிப் பிரிவு ஆகியவை இணைந்து யாழ்ப்பாணம் உயர் குருதி அமுக்க சிகிச்சை பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த சிகிச்சை நிலையத்தின் முதல் பணிப்பாளராக யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட பேராசிரியர் பொது மருத்துவ வல்லுநர் திருநாவுக்கரசு குமணன் நியமிக்கப்பட்டுள்ளார்.



அதிதீவிரமான குருதி அமுக்கம், இளவயதில் குருதி அமுக்கம் போன்ற சிறப்புக் கவனிப்பு தேவையுள்ள நோயாளிகள் இந்த சிகிச்சை பிரிவினால் சிகிச்சையளிக்கப்படுவார்கள்.

அத்தோடு இந்த சிகிச்சை நிலையம் ஊடாக மக்களுக்கு உயர் குருதியமுக்கம் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகளையும் ஆராய்ச்சிப் பணிகளையும் முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

# வகுப்பறைகளில் உள்வாங்கப்படும் மாணவர்கள் எண்ணிக்கை மாற்றம்

கொழும்பு, ஜன. 30

தேசியப் பாடசாலைகளின் வகுப்பறைகளில் உள்வாங்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை வரையறுக்குமாறு கல்வி அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

அதன்படிஇ வகுப்பறை ஒன்றில் குறிப்பிட்ட எண்ணிக்கையைவிட மாணவர்களின் தொகை அதிகரிக்குமாயின் தரமான கல்வியை வழங்குவதில் சிக்கல் ஏற்படுமென அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்

இதற்கமையஇ தரம் ஒன்று வகுப்பறை ஒன்றில் அதிகபட்சமாக 40 மாணவர்கள் மாத்திரம் உள்வாங்கப்படவேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஏனைய வகுப்பறைகளில் அதிகபட்சமாக 45 மாணவர்களை மாத்திரம் உள்ளீர்க்கவேண்டுமெனக் கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

(அ)

# தேசிய அளவில் தடுப்பூசிகள் அடுத்த மாதம் வழங்கப்படும்

## சுதர்சினி பெர்னாண்டோபுள்ளே கூறுகிறார்



**கொழும்பு,ஜன.30**

**பெப்ரவரி அல்லது மார்ச் மாதங்களில் தேசிய அளவில் தடுப்பூசி வழங்கும் திட்டத்தை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளதாக ஆரம்ப சுகாதார இராஜாங்க அமைச்சர் சுதர்சினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் சிறந்த தலைமைத்துவம் காரணமாக தடுப்பூசி பயன்பாடு எதிர்பார்த்ததைவிட மிக விரைவில் தொடங்கியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாரஹேன்பிட்டி இராணுவ வைத்தியலையில் நேற்று வெள்ளிக்கிழமை காலை நடைபெற்ற முதலாவது தடுப்பூசியை வழங்கும் நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே சுதர்சினி பெர்னாண்டோபுள்ளே மேற்கண்டவாறு கூறினார்.

தடுப்பூசிகளை இலங்கைக்கு நன்கொடையாக வழங்கியதற்காக இந்தியாவுக்கு அரசாங்கத்தின் சார்பாக பாராட்டுகளை தெரிவித்த அவர், கோவிஷீல்ட் தடுப்பூசிகளைத் தவிர்த்து வேறு தடுப்பூசிகளை கொள்வனவு செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

தடுப்பூசி பயன்பாடு தொடங்கப்பட்டதைத் தொடர்ந்து இலங்கை மீண்டும் இயல்பு நிலைக்கு திரும்பும் என நம்புவதாகவும் அவர் கூறினார்.



# பிரதேச செயலாளரை இடமாற்ற வேண்டாம்

## செட்டிகுளத்தில் ஆர்ப்பாட்டம்

வவுனியா, ஜன. 30

வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலாளரை இடமாற்றம் செய்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்து செட்டிகுளம் பிரதேச மக்களால் ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

நேற்றுக் காலை வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலகத்துக்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் நடந்தது.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மக்கள், செட்டிகுளம் பிரதேச செயலாளர் தமக்கு சிறந்த முறையில் சேவையாற்றியுள்ளதாகவும் அவரை இடமாற்றம் செய்யாமல் மீண்டும் அதே பகுதிக்கு நியமிக்குமாறும் கோரினர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஏன் இந்த அவசர இடமாற்றம், நிறுத்து நிறுத்து எம்மவரை மாற்றுவதை நிறுத்து, யாருக்கு இலாபமீட்ட இந்த இடமாற்றம் போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியிருந்ததுடன் ஒருங்கிணைப்புக் குழு தலைவருக்கும் அரச அதிபருக்கும், மகஜர்களையும் கையளித்தனர்.

சம்பவ இடத்திற்கு மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவர் கு.திலீபன் விஜயம் செய்திருந்ததுடன் மக்களின் கோரிக்கைக்கான தீர்வை வழங்குவதாக உறுதிமொழி அளித்தார்.

அண்மையில் செட்டிகுளம் பிரதேச செயலாளர் க. சிவகரன் வேலணை பிரதேச செயலகத்துக்கு மாற்றப்பட்டுள்ளதுடன் வேலணை பிரதேச செயலாளர் செட்டிகுளத்துக்கு மாற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கொரோனாவிலிருந்து மாணவர்களை பாதுகாக்க அமெரிக்கா உதவியளிப்பு

கொழும்பு, ஜன. 30

இலங்கையில் மாகாணக் கல்வித் திணைக்களம் , வலயக் கல்வி அலுவலகம் மற்றும் சுகாதார சேவைகள் அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து நாடு முழுவதும் 120 பாடசாலைகளில் அமெரிக்கா சுகாதார அறைகளை அமைத்து வருகின்றது.

இது, இலங்கையின் ஆயிரக்கணக்கான மாணவர்களின் சுகாதாரம் மற்றும் நல்வாழ்வுக்கு உதவுவதற்கான முன்னெடுப்பு என அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டம், அமெரிக்க அரசாங்கத்தின் அபிவிருத்தி முகவரமைப்பான சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரமைப்பு உடாக அமுல்படுத்தப்படுகிறது.

கொரோனாவுக்கு எதிரான அடிப்படை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை உறுதிப்படுத்துவதற்கான கல்வி அமைச்சின் பரிந்துரைகளை இந்தச் சுகாதார அறைகள் ஊக்குவிப்பதுடன், படுக்கைகள், மெத்தைகள், முதலுதவி உபகரணங்கள், நகர்த்தக்கூடிய மறைப்புத் திரைகள் மற்றும் நீர்விநியோகிப்பான்கள் ஆகியவற்றை இவை கொண்டிருக்கும் என அமெரிக்கத் தூதரகத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தேவைப்படும் பட்சத்தில் இந்த அறைகள் மாணவர்களுக்கான தனிமை மற்றும் தொடர்புடைய கவனிப்பை வழங்குகின்றன.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, அநுராதபுரம், கண்டி, மொனராகலை, மற்றும் கம்பஹாவில் அமைந்துள்ள இந்தச் சுகாதார அறைகள் கொவிட்-19 தொற்று நோய் பரவல் முடிவடைந்த பின்னரும்கூட மாணவர்களின் நல்வாழ்வை ஊக்குவிக்கும்.

மாணவர்கள் தங்களது பார்வையை சோதித்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும் என்பதுடன், ஏனைய சுகாதார சேவைகளையும் அணுக முடியும் என்று அமெரிக்கத் தூதரகம் குறிப்பிட்டுள்ளது.

இதுகுறித்து, அமெரிக்கத் தூதுவர் அலெய்னா டெப்லிட்ஸ் கூறுகையில், "50 வருடங்களுக்கு மேலாக, அமெரிக்காவின் உலகளாவிய சுகாதாரத் திட்டங்கள் உயிர்களைக் காப்பாற்றியுள்ளன. நோயால் மிகவும் பாதிக்கப்படக்கூடிய மக்களைப் பாதுகாத்துள்ளன. மற்றும் ஸ்திரமான சமூகங்களை ஊக்குவித்துள்ளன.

சந்தேகத்திற்கிடமான நோயாளிகளை தனிமைப்படுத்துவதில் சுகாதார அதிகாரிகளுக்கு உதவுவதன் மூலமும் இலங்கையின் கிராமிய பிரதேசங்களில் மாணவர்களின் ஒட்டுமொத்த சுகாதாரத்தை மேம்படுத்துவதன் மூலமும் கொவிட்-19 பரவலைக் குறைக்க நாம் உதவுகிறோம்" என்று குறிப்பிட்டார்.

# சட்டவிரோதமாக மரக்கடத்தலில் ஈடுபட்டவர் கைது

வவுனியா, ஜன. 30

சட்டவிரோதமான முறையில் மரக்கடத்தலில் ஈடுபட்டிருந்த நபர் ஒருவரை வவுனியா மடுகந்தை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

கெப்பிற்றிக்கொலாவ காட்டுப்பகுதியில் மரங்கள் கடத்தப்படுவதாக நேற்றுமுன்தினம் விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து மடுகந்தை விசேட அதிரடிப்படை பொறுப்பதிகாரி ஆர்.எம்.வி. நிமால் தலைமையிலான 12 பேர் கொண்ட குழுவினரால் அந்தப் பகுதி சுற்றிவளைக்கப்பட்டது.

இதன்போது கெப்பிற்றிக்கொலாவ பகுதியைச் சேர்ந்த 31 வயதுடைய நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டதுடன் மரத்தை வெட்டுவதற்கு பயன்படும் இயந்திரமும் கைப்பற்றப்பட்டது.

இதேவேளை, அறுக்கப்பட்டு கடத்திச் செல்லப்படவிருந்த மூன்று இலட்சம் ரூபா பெறுமதியான மரங்களும், மரக்குற்றிகளும் மீட்கப்பட்டன. கைது செய்யப்பட்டவர் மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக கெப்பிற்றிக்கொலாவ பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# ரயிலில் மோதுண்டு 5 மாடுகள் மரணம்

கிளிநொச்சி, ஜன. 30

கிளிநொச்சி முகமாலைப் பகுதியில் ரயிலுடன் மோதுண்டு 5 கால்நடைகள் உயிரிழந்துள்ளன.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த ரயிலிலேயே கால்நடைகள் மோதுண்டுள்ளன. இந்த சம்பவத்தில் ஐந்து பசுக்கள் உயிரிழந்துள்ளதுடன், நான்கு பசுக்கள் காயமடைந்துள்ளன.

உயிரிழந்த பசுக்களின் உடல்கள் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதோடு, காயமடைந்த பசுக்களுக்கு சிகிச்சையளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-08 உப்புக்குளம் வீதி ஆதன இல 13 என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தினைக் கொண்ட ஆதனம் நாகமுத்து சின்னத்தம்பி விஸ்வநாதன் ஆறுமுகத்தின் உரிமையாளர் என ஆதனப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை நாகமுத்து கணபதிப்பிள்ளை பிரசித்த நொத்தாரிசு சு.செ.மகாதேவா முகதாவில் நிறைவேறிய 559 இலக்க 09.10.1950ம் திகதிய அறுதி உறுதி மூலம் நாகமுத்து சின்னத்தம்பிக்கு வழங்கியுள்ளார்.

பின்னர் நாகமுத்து சின்னத்தம்பி காலஞ்சென்ற பின் அவருடைய பிள்ளைகளான சின்னத்தம்பி யோகராஜா அலோசியஸ் விமலாதேவி மற்றும் டக்லஸ் வசந்தமாலா ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு R.இளங்குமரன் முகதாவில் 791 இலக்க 2010.08.26ஆம் திகதிய நன்கொடை மூலமாக நாகமுத்து சின்னத்தம்பியின் இன்னோர் மகளான கந்தசாமி லலிதாதேவிக்கு நன்கொடை உறுதி எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது.

ஆதனவிபரம்:-

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று சிவியாதெரு இறை "ஆத்தியடி வளவு" நிலப்பரப்பு 09 குளி 03 ஆனால் நில அளவையாளர் எஸ்.சிவலோகநாதன் அவர்களால் 12.06.1989 திகதியிட்டு வரையப்பட்ட S.473 என்ற இலக்கம் கொண்ட நில அளவைப்படத்தின் படி இதன் விஸ்தீரணம் நிலப்பரப்பு (8) குளி (11) இதில் பிரிக்கப்பட்டதும் மேற்படி வரைபடத்தில் துண்டு 6 எனக்காட்டப்பட்டதுமான காணி இதன் விஸ்தீரணம் நிலப்பரப்பு 01 குளி 7.5 இதற்கு எல்லை.

வடக்கு :- புகையிரதத்திற்கு சொந்தமான காணி.
கிழக்கு :- மேற்குறித்த நில அளவைப்படத்தில் துண்டு 07.
தெற்கு :- உப்புக்குளம்.
மேற்கு :- மேற்குறித்த நில அளவைப்படத்தில் துண்டு 02 மற்றும் 05.

தற்போது கந்தசாமி லலிதாதேவி இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது கந்தசாமி லலிதாதேவி என்னும் பெயரிற்கு பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**சி.மணிவண்ணன்**
**கௌரவ முதல்வர்**
**யாழ்.மாநகரசபை**

## வவுனியாவில் இடம்பெற்ற விபத்தில் பெண் காயம்

வவுனியா, ஜன. 30

வவுனியா பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்ற குடும்பப் பெண் ஒருவர் காயமடைந்து வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது குறித்து மேலும் தெரியவருகையில்-

வவுனியா தலைமை பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக நேற்று காலை மணிக்கூட்டுக் கோபுரம் நோக்கி பிளசர் ரக மோட்டார் சைக்கிளில் சென்ற குடும்பப் பெண் ஒருவரை பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக கண்டி வீதியில் செல்ல முற்பட்ட கார் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.

இதன்போது காயமடைந்தவர் உடனடியாக பொலிஸாரினால் அங்கிருந்து வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

விபத்தை ஏற்படுத்திய கார் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் இந்த விபத்து குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் மேலும் கூறினர்.

(அ)

# தேசிய பாடசாலைகள் என்ற போர்வையில் மாகாண அதிகாரங்களை பிடுங்கும் முயற்சி

## வடக்கு ஆளுநருக்கு அவைத் தலைவர் கடிதம்



யாழ்ப்பாணம், ஜன. 30

**மாகாணப் பாடசாலைகளை தேசியப் பாடசாலைகள் என்று தரமுயர்த்துவதாகக் கூறி அவற்றை மத்திய அரசு கையகப்படுத்துவது அதிகாரப்பகிர்வுக்கு முரணானதாகும் என்று வடக்கு மாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், மாகாண ஆளுநர் திருமதி.பி.எஸ்.எம்.சார்ள்ஸுக்கு எடுத்துரைத்துள்ளார்.**

தேசியப் பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகள் மாணவர்களிடையே ஒரு தாழ்வு மனப்பான்மையை உருவாக்கும் என்பது மறுக்க முடியாது. இவ்வாறான பாகுபாடு ஆரோக்கியமானதல்ல என்றும் அவர் ஆளுநருக்கு சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் வடமாகாண ஆளுநருக்கு அவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம் எழுதியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ்ப்பாண மாவட்டத்தின் பத்து பிரதான பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாக மாற்றப்பட்டுள்ளன எனவும் அவை வடக்கு மாகாண சபை நிர்வாகத்தில் இருந்து மத்திய கல்வி அமைச்சின் கீழ் கொண்டுவரப்படுவதாகவும் கடந்த வாரம் ஊடகச் செய்திகளின் மூலமாக அறிய வந்துள்ளது.

குறித்துரைக்கப்பட்ட பாடசாலைகள் அல்லாத அரச பாடசாலைகள் அரசியலமைப்பு ரீதியாக மாகாண சபைகளுக்கு கையளிக்கப்பட்ட விடயம் என்ற ரீதியில் இந்தப் பத்துப் பாடசாலைகளும் இதுவரை மாகாண கல்வி அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்பட்டு வந்தவையாகும். அவற்றை மத்திய அரசு கையகப்படுத்துவது அதிகாரப்பகிர்வுக்கு முரணானதாகும்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட வட மாகாண சபை இயங்கிய காலத்தில் இவ்வாறான முயற்சிகள் யாவும் இங்கே மறுதலிக்கப்பட்டமை சுட்டிக்காட்டப்பட வேண்டும்.

இந்த நிர்வாக அதிகார மாற்றத்தின் தர்க்கவியல் புரிந்து கொள்ளக் கூடியதாக இல்லை. அதாவது நிர்வாக குறைபாடுகள் காரணமாக இருப்பினும் அவை மாகாண சபையினால் சீர்திருத்தப்பட வேண்டும். அவ்வாறு செய்வது ஒரு பிரச்னை அல்ல.

அவற்றை விட தேசியப் பாடசாலைகளுக்கு ஏதாவது மேலதிக வசதி வாய்ப்புக்கள் வழங்கப்படுவதாயின் அவற்றை மாகாண நிர்வாகத்தின் மூலம் வழங்க முடியும். அவற்றுக்காக ஏற்கனவே நடைமுறையில் இருந்த மாகாண சபை அதிகாரத்தை பிடுங்கி மத்திக்கு கொண்டு செல்லுதல் அதிகாரப் பகிர்வை முழுமையாக மீறும் செயற்பாடாகும்.

இந்நச் செயற்பாடு சமூகத்தில் தேசியப் பாடசாலைகள் ஏதோ தரமுயர்ந்தவை எனவும் ஏனையவை தரம் குறைந்தவை என்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்தி தேசியப் பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகள் மாணவர்களிடையே ஒரு தாழ்வு மனப்பான்மையை உருவாக்கும் என்பது மறுக்க முடியாது. இவ்வாறான பாகுபாடு ஆரோக்கியமானதல்ல.

மேலும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு சபை இல்லாத சூழ்நிலையில் இவ்வாறு செய்வது ஜனநாயக விரோதமானது என்பதையும் இச் செயற்பாடு நிறுத்தப்படவேண்டும் என்பதையும் எமது தீர்க்கமான வேண்டுகோளாக பதிவு செய்து கொள்கிறேன்.

தற்போது வடக்கு மாகாண சபையின் சட்டரீதியான நிறைவேற்று அதிகாரி என்ற வகையில் இந்த விடயத்தில் பொருத்தமான நடவடிக்கை எடுக்கும்படி தங்களை வேண்டிக்கொள்கின்றேன்-என்றுள்ளது.

(அ)

# சுகாதாரத்துறையினருக்கு தடுப்பூசி யாழ்ப்பாணத்தில் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன. 30

யாழ். மாவட்டத்தில் போதனா வைத்தியசாலை உள்ளிட்ட வைத்தியசாலை மருத்துவ சேவையாளர்கள் உள்ளிட்ட சுகாதாரத்துறையினருக்கு கொவிட் -19 தடுப்பூசி மருந்து ஏற்றும் பணி இன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலை மருத்துவ வல்லுநர்கள், மருத்துவர், தாதியர்கள், மருத்துவ சேவையாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கு கொவிட் -19 தடுப்பூசி மருந்து ஏற்றும் பணி இன்று தொடக்கம் மூன்று நாள்களுக்கு முன்னெடுக்கப்படும் என்று பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

யாழ். போதனா வைத்தியசாலைக்கு 2 ஆயிரத்து 300 கொவிட் -19 தடுப்பூசி மருந்துகள் கோரப்பட்டுள்ளன. யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் ஊடாக அதனை பெற்றுக்கொள்வோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இங்கிலாந்தின் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தால் உருவாக்கப்பட்ட அஸ்ட்ரா ஜெனெகா கோவிஷீல்ட் கொவிட்-19 தடுப்பூசியின் 5 லட்சம் டோஸ்கள் இந்தியாவினால் இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டன.



# பயணிகள் பஸ் கவிழ்ந்து 13 பேர் படுகாயம்

கொழும்பு, ஜன. 30

பொலனறுவை - மட்டக்களப்பு பிரதான வீதி புனானைப் பகுதியில் நேற்று தனியார் பஸ் ஒன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியது.

இந்த விபத்தில் 13 பேர் படுகாயமடைந்த நிலையில் வாழைச்சேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

பொலனறுவையில் இருந்து கல்முனை நோக்கிப் பயணித்த தனியார் பஸ் நேற்று காலை 6.30 மணிக்கு புனானைப் பிரதேசத்தில் முன்னால் சென்ற வாகனத்தை முந்திச் செல்ல முற்பட்டபோது வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகிக் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இதன்போது பஸ்ஸில் பயணித்த 13 பேர் படுகாயமடைந்த நிலையில் வாழைச்சேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதில் 3 பேர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

(அ)

# கிளிநொச்சிக்கு 1100 தடுப்பூசிகள்

## சுகாதாரத் துறையினருக்கு வழங்கும் பணி இன்று ஆரம்பம்

கிளிநொச்சி, ஜன. 30

கிளிநொச்சி மாவட்ட சுகாதாரத்துறையினருக்கு கொவிட் -19 தடுப்பூசி ஏற்றும் பணி இன்று 6 வைத்தியசாலைகளில் ஆரம்பிக்கப்படும் என்று பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் என்.சரவணபவன் தெரிவித்தார்.

இங்கிலாந்தின் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தால் உருவாக்கப்பட்ட அஸ்ட்ரா ஜெனெகா கோவிஷீல்ட் கொவிட்-19 தடுப்பூசியின் 5 லட்சம் டோஸ்கள் இந்தியாவினால் இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டன.

அந்த தடுப்பூசி முதல் கட்டமாக சுகாதாரத் துறையினர், பொலிஸார் மற்றும் முப்படையினருக்கு ஏற்றும் பணி நேற்று மேல் மாகாணத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்துக்கு கொவிட் -19 தடுப்பூசியின் ஆயிரத்து 100 டோஸ்கள் கிடைத்துள்ளன. அவை மாவட்டத்தில் உள்ள மருத்துவர்கள், தாதியர்கள், மருத்துவ சேவையாளர்கள், பணியாளர்கள் என சுகாதாரத் துறையினருக்கு வழங்கப்படவுள்ளன.

கிளிநொச்சி பொது வைத்தியசாலை, பூநகரி, பளை, தருமபுரம், அக்கராயன் மற்றும் முழங்காவில் ஆரம்ப வைத்தியசாலைகள் ஊடாக இன்று முதல் சுகாதாரத் துறையிருக்கு வழங்கப்படவுள்ளது என்று கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் என்.சரவணபவன் தெரிவித்தார்.

(அ)

## இந்திக அனுருத்தவுக்கு தொற்று இல்லை

கொழும்பு, ஜன.30

இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த கொரோனா தொற்றால் பாதிக்கப்படவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வசந்த யாப்பா பண்டார கொரோனா வைரஸினால் பாதிக்கப்பட்டுள்ளார். எனினும், தனியார் தொலைக்காட்சி அலைவரிசையில் நடந்த அரசியல் நிகழ்ச்சி ஒன்றில் இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த, பாராளுமன்ற உறுப்பினரான வசந்த யாப்பா பண்டாரவுடன் கலந்துகொண்டதன் காரணமாக அமைச்சர் சுய தனிமைப்படுத்தலுக்கு உள்ளானார்.

இருப்பினும் இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த பின்னர் பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார். அவர், கொரோனா வைரஸினால் பாதிக்கப்படவில்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

# ஐ.டி.எச். பணிப்பாளருக்கும் நேற்று தடுப்பூசி ஏற்றப்பட்டது

கொழும்பு, ஜன. 30

முதல் மருத்துவ அதிகாரியாக கொழும்பு தொற்றுநோயியல் வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் ஆனந்த விஜேவிக்ரம, இந்திய கோவிஷீல்ட் தடுப்பூசி போட்டுக் கொண்டார்.

இந்திய கோவிஷீல்ட் தடுப்பூசி நரஹேன்பிட்டவில் உள்ள இராணுவ வைத்தியசாலையில் வைத்து மூன்று ராணுவ வீரர்களுக்கு நேற்று செலுத்தப்பட்டது.

இந்தியாவினால் வழங்கப்பட்ட அஸ்ட்ராஜெனெகா கோவிஷீல்ட் தடுப்பூசி, சுகாதார அதிகாரிகள், முப்படையினர் மற்றும் பொலிஸாருக்கு முதலில் செலுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# மக்களின் பொறுப்பின்மையால் அதிகரித்துவருகின்றது தொற்று!

## சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 30

பொதுமக்களின் கவனக் குறைவு மற்றும் பொறுப் பின்மை காரணமாக நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் கொரோனா தொற்று அதிகரித் துள்ளது என பொதுச் சுகாதா ரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

ஊரடங்கு உத்தரவு மற்றும் தனிமைப்படுத்தல் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பகுதிகளில் வாழும் மக்கள், அடிப்படை சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்ற மறந்துவிட்டார்கள் என அந்தச் சங்கத்தின் செயலா ளர் எம்.பாலசூரிய தெரிவித் துள்ளார்.

இது மிகவும் பரிதாபகரமான சூழ்நிலை என்றும் சுகாதார அதி காரிகளாக இந்த நிலமையாக் காணும்போது மிகவும் வருத் தமளிப்பதாகவும் அவர் குறிப் பிட்டார்.

அத்தோடு மக்கள் ஒவ்வொ ருவருக்கும் பின்னால் சென்று சுகாதார வழிகாட்டுதல்களைக் கடைப்பிடிக்கச் சொல்ல முடி யாது என்றும் எம்.பாலசூரிய தெரிவித்தார்.

மக்களின் அலட்சியமே தற்போதைய ஆபத்தான சூழ் நிலைக்கு வழிவகுத்தது என்றும் பொது சுகாதார பரிசோதகர் கள் சங்கத்தின் செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, சுகாதார அதிகாரி களுக்கு மக்கள் ஒத்துழைப்பை வழங்கவேண்டும் என்றும் வைரஸ் பரவுவதைக் கட்டுப் படுத்தும் முயற்சியில் அரசாங் கமும் சுகாதார அதிகாரிகளும் தங்களால் முடிந்த அனைத்தையும் செய்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.



# மலையக மக்களின் சாபத்தினால்தான் அழிந்தது ஐ.தே.க.!

## அடித்துச் சொல்கிறார் வடிவேல் சுரேஷ்

கொழும்பு,ஜன.30

**மலையக மக்களின் சாபத்தால்தான் ஐக்கிய தேசியக்கட்சி இன்று காணாமல்போயுள்ளது என்று இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச்செயலாளர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.**

பெருந்தோட்டத் தொழிலா ளர்களுக்கு நல்லாட்சியின் போது 50 ரூபா சம்பள உயர் வைப் பெற்றுக்கொடுக்க முடி யாமல்போனமை தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதில ளிக்கையிலேயே அவர் இவ் வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

எமது மக்களுக்கு அந்த தொகையை வழங்காததால் தான் ஐக்கிய தேசியக்கட்சி கடந்த தேர்தலில் படுதோல்வி அடைந்தது. எமது மக்களின் சாபத்தால் ஒருவர்கூட அந்தக் கட்சியின் சார்பில் இன்று பாராளுமன்றத்தில் இல்லை.

அத்துடன் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப் படை நாட் சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்படவேண்டும். அவ்வாறு இல்லையேல் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படும்-என்றார். (அ)

# நானு ஓயாவில் விரைவில் கேபிள் கார் செயற்திட்டம்

கொழும்பு, ஜன. 30

நானுஓயாவில் இருந்து நுவ ரெலியா வரையிலான கேபிள் கார் திட்டத்தை விரைவில் ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ள தாக சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித் துள்ளார்.

இதற்காக 52 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா கவும் அவர் மேலும் கூறினார்.

நுவரெலிய மாவட்ட வாழ் வாதார அபிவிருத்திக்கான குழுக் கூட்டத்தில் அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

மலைகளில் கொழுந்து பறிக்கும் தொழிலாளிகள் அதனை ஒரு இடத்தில் சேர்க்க, அவற்றை தொழிற்சாலை களுக்கு கொண்டுவருவதற்கு ஆரம்ப காலத்தில் கேபிள் கார் தொழில்நுட்பம் பயன்படுத்தப் பட்டிருந்தது.

ஆங்கிலயேர் காலத்தில் இந்தத் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்ட போதிலும் பிற்காலத்தில் வீதிகள் அமைக் கப்பட்டு, வாகனப் போக்கு வரத்து மேம்படுத்தப்பட்ட நிலையில் கேபிள் கார் திட்டம் முற்றாக கைவிடப்பட்டது.

இந்த நிலையில், சுற்றுலாத் துறையை மேம்படுத்தும் வகை யில் தற்போது இந்த கேபிள் கார் திட்டத்தை ஆரம்பிப்ப தற்கு அரசாங்கம் திட்டமிட் டுள்ளது.

# அரசியல் கைதிகள் விடுதலைக்காக மன்னாரில் விளக்கேற்றல் வைபவம்




மன்னார், ஜன. 30

தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக்கோரி வடக்கு - கிழக்கில் பல்வேறு போராட்டங்கள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில் மன்னார் மாவட்ட பாதிக்கப்பட்ட குடும் பங்களுக்கான இணையத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை மன் னாரில் விளக்கேற்றும் நிகழ்வு இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட பாதிக் கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் இணைப்பாளர் எஸ்.திலீபன் தலைமையில், அரசியல் கைதிகளை விடுதலை செய்யக்கோரி விளக்கேற்றும் நிகழ்வு நடந்தது.

மன்னார் தரவன் கோட்டை ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலயம், தோட்டவெளி, பறப்பான்கண் டல், இசங்கன்குளம் ஆகிய இடங்களிலுள்ள ஆலயங்களில் நேற்று முன் தினம் மாலை 6.15 மணியளவில் விளக்கேற்றும் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதில் அரசியல் கைதிகளின் உறவுகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (அ)

# புத்த விகாரைகளுக்கு எதிரான தீர்மானத்தால் பிரதேச அபிவிருத்திக் குழு கூட்டத்தில் அமளி

யாழ்ப்பாணம், ஜன. 30

தெல்லிப்பழை பிரதேசத் துக்கு உட்பட்ட பகுதியில் அண்மையில் அமைக்கப்பட்ட புத்த விகாரைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்று தமிழ்த் தேசி யக் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டாக முன்வைத்துள்ள கோரிக்கை யால் தெல்லிப்பழை அபிவிருத் திக் குழுக் கூட்டத்தில் பர பரப்பு ஏற்பட்டது.

2013 ஆம் ஆண்டு தெல்லிப் பழை பிரதேசத்தில் இராணு வத்தினர் நிலைகொண்டிருந்த காணி ஒன்றில் கட்டப்பட்ட புத்த விகாரையை தொல்லியல் திணைக்களத்தில் பதிவு செய்வ தற்கான முனைப்புக்கள் முன் னெடுக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டு பாராளு மன்ற உறுப்பினர்கள் குறித்த நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

அதேவேளை, அண்மையில் அமைக்கப்பட்டுள்ள புத்த விகா ரைகளுக்கு எதிராக நட வடிக்கை எடுக்கவேண்டும் என்று வலியுறுத்தித் தீர்மானம் நிறைவேற்றவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சுமந் திரன், தமிழ்த் தேசிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினர்கள் கஜேந்திரகுமார் பொன்னம் பலம், செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்டோர் வலியுறுத்தி னர்.

இதேவேளை, மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் சுதந்திரக்கட்சி பாராளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன், புத்தவிகாரை என்ற சொல்லைச் சேர்க்காமல் தீர்மானத்தை நிறைவேற்றலாம் என்று வலியுறுத்தியதால் அங்கு காரசாரமான வாதப்பிரதி வாதங்கள் இடம்பெற்றன. (அ)

# ஆயிரத்தை பெற்றுக்கொடு இல்லையேல் வெளியேறு!

## இ.தொ.காவுக்கு மனோ எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 30

பெருந்தோட்டத் தொழிலாளர் களுக்கு அடிப்படை நாட் சம்பளமாக ஆயிரம் ரூபாவை இலங்கைத் தொழிலா ளர் காங்கிரஸ் பெற்றுக்கொடுக்க வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் அரசாங்கத்தில் இருந்து வெளியேற வேண்டும் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும், கொழும்பு மாவட்ட எம்.பியுமான மனோ கணேசன் வலியுறுத்தினார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின்போது, பெருந்தோட்டத் தொழிலாளர்களுக் கான வேதன உயர்வு தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கை யிலேயே அவர் இவ்வாறு வலியுறுத்தி னார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

பெருந்தோட்டத் தொழிலாளர் களுக்கு ஆயிரம் ரூபா சம்பளம் பெற்றுக் கொடுக்கப்படும் என்ற உறுதிமொழியை மலையகத்துக்கே வந்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வழங்கினார். பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரணவும் வழங்கப்படும் எனக் கூறி னார். அமரர் ஆறுமுகன் தொண்டமா னும் அறிவிப்பு விடுத்தார். ஆனால் ஆயி ரம் ரூபா சம்பள உயர்வு வழங்கப்பட வில்லை. தொழில் அமைச்சர் தலையிட் டும் எதுவும் நடக்கவில்லை.

அமரர் ஆறுமுகன் தொண்டமானின் கனவுகூட அடிப்படைச் சம்பளம் ஆயி ரம் ரூபா என்பதாகும். இறுதிக்கிரியை களில் பங்கேற்ற ஆளுங்கட்சி பிரமுகர் கள், நிச்சயம் ஆயிரம் ரூபா வழங்கப் படும் என உறுதியளித்தனர். அந்த உறுதிமொழி இன்னும் நிறைவேற்றப் படவில்லை.

வரவு - செலவுத் திட்டத்தின் ஊடா கப் பிரதமர் முன்மொழிவு செய்தார். ஏதோ சம்பள உயர்வு கிடைத்துவிட்டது போல பட்டாசு கொளுத்திக் கொண்டா டப்பட்டது. எதுவும் நடக்கவில்லை. தற்போது சம்பள உயர்வுக்கான நட வடிக்கையை எடுக்குமாறு தொழில் அமைச்சருக்கு, அமைச்சரவை பணித் துள்ளது. மாறாக இது சட்டரீதியில் எடுக்கப்பட்ட தீர்மானம் அல்ல.

எது எப்படி இருந்தாலும் அடிப் படை நாட்சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்படவேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். நல்லாட்சியின்போது மலையக மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கு நாம் பல நடவடிக் கைகளை எடுத்தோம். சம்பள உயர்வு விவகாரத்தில் விமர்சனம் இருக்கின்றது. அதனால்தான் இன்று எதிரணியில் இருக்கின்றோம். ஆளுங்கட்சியில் இருக்கும் இ.தொ.கா, சம்பள உயர்வை பெற்றுக்கொடுக்க வேண்டும். இல்லை யென்றால் அரசியிலிருந்து வெளியேற வேண்டும். இந்த அரசாங்கத்தின்கீழ் பெருந்தோட்டப்பகுதிகளில் எதுவும் நடக்கவில்லை. அடிக்கல் மட்டுமே நடப்படுகின்றது. இ.தொ.காவின் வகிபாகமும் பூச்சியமாகும்.-என்றார்.

# வரலாறாகிவிட்ட ஈழத்தின் இலக்கியக்குரல்!

■ முருகபூபதி

இலங்கையின் பிரபல எழுத்தாளரும், மல்லிகை மாத இதழின் ஆசிரியருமான டொமினிக் ஜீவா நேற்று முன் தினம் மாலை தனது 94 வயதில் கொழும்பில் காலமானார். இதனையொட்டி இந்த ஆக்கம் பிரசுரமாகின்றது.

யாழ்ப்பாணத்தில் ஜோசப் - அன்னம்மா தம்பதியருக்கு 1927 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 27 ஆம் திகதி பிறந்த டொமினிக் ஜீவா, கொழும்பில் தனது ஏகபுதல்வன் திலீபனின் இல்லத்தில் கடந்த 29 ஆம் திகதி ( 29 ஜனவரி 2021 ) தமது 94 வயதில் மறைந்தார்.

யாழ்ப்பாணம், அரியாலையில் நாவலர் வீதியில் அமைந்த ஸ்ரான்லி கல்லூரியில் (தற்பொழுது கனகரத்தினம் மத்திய கல்லூரி) 1962 ஆம் ஆண்டளவில் எனக்கும் எனது மச்சான் முருகானந்தனுக்கும் ஆறாம் வகுப்பில் புலமைப்பரிசில் அனுமதி கிடைத்தது. அப்பொழுது எனக்கு பதினொரு வயதிருக்கும்.

நான் முதல் தடவையாக பனைமரங்களைப் பார்த்து அக்காலத்தில்தான். அதற்கு முன்னர் அந்தக் கற்பகதருவை பாடசாலை பாடப்புத்தகங்களில்தான் பார்த்திருக்கின்றேன்.

ஈழவிடுதலைப்போராட்டம் ஆரம்பமானதன்பின்பு பல இலக்கிய மற்றும் ஆய்வு நூல்களில் பனைமரங்கள் அட்டைப்படமாகின.

ரஜனி திராணகம சம்பந்தப்பட்ட யாழ். பல்கலைக்கழக மனித உரிமை ஆசிரியர் சங்கத்தின் வெளியீடான முறிந்த பனை, மூத்த பத்திரிகையாளர் கார்மேகத்தின் ஈழத்தமிழர் எழுச்சி, செ.யோகநாதன் தொகுத்த ஈழச்சிறுகதைகள் வெள்ளிப்பாதசரம், ஜெயமோகனின் ஈழத்து இலக்கியம், பேராசிரியர் கா. சிவத்தம்பியின் யாழ்ப்பாணம் சமூகம் - பண்பாடு - கருத்துநிலை உட்பட பல நூல்கள் பனைமரத்தை ஒரு குறியீடாகவே அட்டைகளில் சித்திரித்துள்ளன.

வவுனியாவைக்கடந்தவுடன் ஏ-9 பாதையின் இரு மருங்கும் தென்பட்ட பனைமரங்களை கல்விக்காக பயணித்த அக்காலத்தில் பரவசத்துடன் பார்ப்பேன்.

அவ்வாறு அந்த மண்ணில் நான் பரவசத்துடன் பார்த்த ஒரு மனிதரின் பெயர் டொமினிக்ஜீவா.

எங்கள் மாணவர் விடுதியின் சார்பாக மாதாந்தம் நடத்தப்படும் ஒரு நிகழ்வுக்கு அவர் பிரதம பேச்சாளராக அழைக்கப்பட்டிருந்தார். அதற்கு முன்னர் நான் அவரைப் பார்த்தது இல்லை. அவர் அருந்துவதற்கு ஒரேஞ் பார்லி போத்தல் ஒன்றை மேசையில் வைத்திருந்தார்கள்.

வெள்ளை வேட்டி வெள்ளை நஷனல் அணிந்து வந்திருந்தார். மேடையில் உரத்த குரலில் பேசினார். அவ்வப்போது கைகளை உயர்த்தினார்.

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஆப்ரகாம் லிங்கனின் வாழ்க்கைச் சம்பவங்களை விபரித்தார் சங்கானையில் நடந்த ஒரு சாதிக்கலவரம் பற்றிச்சொன்னார்.

எனக்கு ஏதோ கொஞ்சம் புரிந்தது. அவரது முகத்தையும் மேசையிலிருந்த குளிர்பானப்போத்தலையும் பார்க்கிறேன். அவரது நெற்றி இடைக்கிடைபுடைத்து நரம்புகளும் தெரிந்தன.

எனக்கு அந்த வயதில், அவர் ஏதோ கோபத்தில் பேசுவதாகவே புரிந்தது.

தனது உரை முடியும் வரையில் அவர் அந்த குளிர்பான போத்தலை தொடவே இல்லை. நீண்டநேரம் பேசியும் அவரது நா வறண்டுவிடவில்லை என்பதும் எனக்கு ஆச்சரியமானது.

காலப்போக்கில் சுமார் பத்தாண்டுகள் கழித்து அதாவது 1971 காலப்பகுதியிலும் அதே உணர்ச்சிப்பிழம்பாக அவர் பேசியதை கண்ணுற்றபொழுது அதற்குப் பொருள் தர்மாவேசம் என்று புரிந்துகொண்டேன். அத்தருணத்தில் மகாகவி பாரதியின் ரௌத்திரம் பழகு என்ற சொற்பதத்தையும் தெரிந்துகொண்டிருந்தேன்.

இலங்கையில் முதல் முதலாக தமிழில் சிறுகதை இலக்கியத்திற்காக தேசிய சாகித்திய விருதைப்பெற்றவர். விருது பெற்ற அந்தக்கதைத்தொகுதியின் பெயர்: தண்ணீரும் கண்ணீரும்.

விருதை வாங்கிக்கொண்டு யாழ்ப்பாணத்துக்கு ரயிலில் திரும்பிவருகிறார். ஊர்மக்கள் அச்சமயம் யாழ்ப்பாண மேயராக பதவியிலிருந்த துரைராஜாவின் தலைமையில் மாலை அணிவித்து அவரை வரவேற்கின்றனர்.

யாழ். ரயில் நிலையத்துக்கு சமீபமாகவே அவரது வீடு அமைந்திருக்கிறது. அவருக்கு நேரம் சொல்வதற்கு அங்கு வரும் ரயில்கள் போதும்.

கஸ்தூரியார் வீதியில் தந்தையாரின் ஜோசப்சலூனை கவனித்துக்கொண்டார்.

அத்துடன் எழுதத்தொடங்கினார். புத்தகக்கடை பூபாலசிங்கமும் ராஜகோபல் என்ற அன்பரும் அவருக்கு வாசிக்கும் ஆர்வத்தை தூண்டியதுடன் சிறந்த நூல்களையும் படிக்கக்கொடுத்தனர்.

கம்யூனிஸ்ட் கட்சியிலும் அங்கத்துவம் பெற்றிருந்தார். ஐக்கிய தேசியக் கட்சிபதவியிலிருந்த காலப்பகுதியில் ஒரு மேதின ஊர்வலத்தில் அவர் கலந்துகொண்டு தொழிலாள விவசாய பாட்டாளி மக்களுக்காக கோஷம் எழுப்பியவாறு சென்றபொழுது யாரோ எறிந்த கல் அவரது நெற்றியை பதம்பார்த்தது.




யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டார்.

அங்கே கடமையிலிருந்த அவரது இலக்கிய நண்பரும் மருத்துவருமான டொக்டர் நந்தி அவரது காயத்துக்கு இழையும்போட்டுஇ மருந்திட்டு கட்டுப்போட்டு வீட்டிற்கு சென்று ஓய்வெடுக்குமாறு சொன்னார்.

ஆனால் இந்த தர்மாவேச சிங்கம் சும்மா இருக்குமா?

அந்த இரத்தம் கசிந்த நெற்றிக்கட்டுடன் மேதின மேடைக்குத்திரும்பி, 'இதோ பாருங்கள் முதலாளித்துவ ஏகாதிபத்திய சக்திகளின் பரிசு... ' என்று இரத்தம் கசிந்த நெற்றியை காண்பித்துஇ 'சோஷலிஸம் மலரும் காலம் தூரத்தில் இல்லை' என்று ஆக்ரோஷமாக குரல் கொடுத்தார்.


இந்த வரலாற்றையெல்லாம் அவரது மல்லிகையில் 1972 இல் நான் எனது முதலாவது சிறுகதை எழுதியபின்புதான் தெரிந்துகொண்டேன்.

ஒரு சிறுகதை எழுத்தாளன், பெரிய பொருளாதார வசதிகளோ, உயர்ந்த கல்விப்பின்புலமோ இல்லாமல் தொடர்ச்சியாக 45 ஆண்டுகளுக்கும் மேலாக மல்லிகை இலக்கிய இதழை நடத்தியிருக்கிறார் என்ற சாதனையும்



இன்று காலம் கடந்த செய்திதான்.

இலங்கை பாராளுமன்றத்தில் விதந்து பேசப்பட்ட இலக்கியவாதியான டொமினிக் ஜீவாவுக்கு அந்தப்பெருமையை பெற்றுக்கொடுத்ததும் அவரது அயராத முயற்சியினால் வெளியாகிக் கொண்டிருந்த மல்லிகைதான்.




மாதாந்தம் மல்லிகையை வெளியிட்டவாறே 'மல்லிகைப்பந்தல்' பதிப்பகத்தின் மூலம் பல படைப்பாளிகளின் படைப்புகளையும் நூலுருவாக்கி விநியோகித்தார்.

எனது, பாட்டி சொன்ன கதைகள், கங்கை மகள் என்பன மல்லிகைப்பந்தல் வெளியீடுகளே.

1975 இல் மல்லிகைப்பந்தல் என்ற பெயரை இலக்கிய சந்திப்புக்காகவே அவர் தெரிவு செய்திருந்தார். அந்தப் பந்தலில் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் எனது முதலாவது (சுமையின் பங்காளிகள்) சிறுகதைத் தொகுதிக்கு வெளியீட்டு நிகழ்வை ஒழுங்குசெய்த விட்டு, அஞ்சலட்டையில் அச்சிடப்பட்ட அழைப்பை எனக்கு அனுப்பியிருந்தார்.

ஆசிரியரும் எழுத்தாளருமான சு. இராஜநாயகன் நிகழ்ச்சிக்குத்தலைமை. இவர்தான் பத்திரிகையாளர் பாரதியின் அப்பா. அந்தப்பயணத்தில் யாழ்ப்பாணத்தில் டானியல்இ வரதர், புத்தகக்கடை பூபாலசிங்கம் ஆகியோரையும் குரும்பசிட்டியில் கனகசெந்திநாதன் உட்பட பல படைப்பாளிகளையும் எனக்கு அறிமுகப்படுத்தியதும் ஜீவாதான்.

யாழ்ப்பாணத்தில் மல்லிகை வெளியான காலங்களில் மாதாந்தம் ரயிலேறி கொழும்பு வந்து சில நாட்கள் தங்கியிருந்து, அலைந்து திரிந்து மல்லிகை பிரதிகளையும் விநியோகித்து இலக்கிய சந்திப்புகளிலும் கலந்துகொள்வார்.

கொழும்பு மலிபன் வீதியில் மல்லிகைக்கு தேவையான வெள்ளீய அச்சு எழுத்துக்கள் மற்றும் அச்சிடும் காகிதாதிகளை வாங்கி ஏதும் யாழ்ப்பாணம் செல்லும் லொறிகளில் ஏற்றிவிட்டு மீண்டும் ரயிலில் யாழ்ப்பாணம் திரும்புவார்.

கொழும்பு வரு முன்னர் எனக்கு ஓர் அஞ்சலட்டையில் தனது வருகை பற்றி எழுதிவிடுவார். எங்கள் நீர்கொழும்புக்கும் வருவார். எங்கள் ஊர் கடற்கரையில்தான் இலக்கிய சந்திப்புகள் நடைபெறும்.

நீர்கொழும்பூர் முத்துலிங்கம், சந்திரமோகன். பவானி ராஜா, சிவம், ரட்ணராஜா, மு.பஷீர், நிலாம், தருமலிங்கம், செல்வரத்தினம் ஆகியோருடன் நானும் அந்தச்சந்திப்புகளில் கலந்துகொள்வேன்.

அத்தகைய ஒரு கடற்கரைச் சந்திப்பில்தான் மல்லிகை நீர்கொழும்பு சிறப்பிதழ் யோசனை மலர்ந்தது.

1972 பெப்ரவரி மாத மல்லிகை, நீர்கொழும்பு சிறப்பிதழாக வந்தது. அதனை வெளியிட்டுவைப்பதற்கு மண்டபம் கிடைக்காத சூழ்நிலையில் எங்களது சூரியவீதி இல்லத்திலேயே அதனை 19-02-1972 ஆம் திகதி நடத்தினோம்.

யாழ்ப்பாணத்தில் போர்மேகங்கள் சூழ்ந்தன. அவரது தோழரும் கம்யூனிஸ்ட் கட்சியின் வடபிரதேச செயலாளருமான தோழர் விஜயானந்தன் கொல்லப்பட்டார். சிலருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. அத்தோடு ஜீவா யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு இடம்பெயர்ந்து கொழும்பு வாசியாகி விட்டார். அவர் கொழும்பு வாசியாவதற்கு முன்பே நான் அவுஸ்திரேலியா வாசியாகிவிட்டேன்.

நீண்ட இடைவெளிக்குப்பின்பு, 1990 இல் மல்லிகை 25 ஆவது ஆண்டு மலர் வெளியான சந்தர்ப்பத்தில் ஜீவாவை சென்னைக்கு அழைத்து அங்கே அவருடன் ஊர் சுற்றினேன். இந்தப்பயணத்தில் கண்ணதாசனின் மனைவியின் இறுதிச்சடங்கிலும் கலந்துகொண்டோம். இங்குதான் சிவாஜிகணேசனையும் சந்தித்தோம்.

ஜெயகாந்தன், சிட்டி, சிவபாதசுந்தரம், சுந்தா சுந்தரலிங்கம், மேத்தா, இன்குலாப், திலகவதி, சிவகாமி, ராஜம் கிருஷ்ணன், ரகுநாதன், பாலகுமாரன், சு. சமுத்திரம், அக்கினி புத்திரன், செ.யோகநாதன், பொன்னீலன், கண.முத்தையா, அகிலன் கண்ணன், ரங்கநாதன், நர்மதா ராமலிங்கம், குணசேகரன், அறந்தை நாராயணன், தி.க.சிவசங்கரன், வைரமுத்து, மேத்தாதாஸன், இளம்பிறை ரஹ்மான், கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர் நல்லகண்ணு, சி.ஏ.பாலன், உட்பட பலரை சந்திப்பதற்கு இந்தப்பயணம் பயன்பட்டது. இலங்கையிலும் ஜீவாவுடன் பல பயணங்களை, குறிப்பாக கொழும்பில் மேற்கொண்டிருக்கின்றேன்.

குண்டூசி விழுந்தாலும் அந்த ஓசையில் விழித்தெழும் எனக்கு, அவரது ஆழ்ந்த (இந்த விடயத்தில் அவர் கொடுத்துவைத்தவர்) உறக்கம் வியப்பானது. இனி அந்த உறக்கமே அவருக்கு நிரந்தரமானது!

மல்லிகை ஜீவா எழுத்தாளர், இதழாசிரியர், சமூகப் போராளி, முதலான அடையாளங்களுடன் மறையவில்லை. வரலாறாகவே வாழ்ந்துகொண்டிருப்பார். ■



# கொரோனாவின் புதிய திரிபை எதிர்கொள்ளும் புதிய தடுப்பூசி!

பிரிட்டனில் நடத்தப்பட்ட ஒரு புதிய தடுப்பூசி பரிசோதனையில், அது 89.3 சதவீதம் கொரோனா வைர ஸுக்கு எதிராக செயல்திற னோடு இருப்பது தெரியவந்திருக்கிறது.

அந்த தடுப்பு மருந்தின் பெயர் நோவாவேக்ஸ். இந்த மருந்து பிரிட்டனில் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா வைரஸின் புதிய திரிபுக்கு எதிராக கூடுதல் செயல்திற னோடு இருப்பதைக் காட்டி இருக்கிறது என பிபிசியின் மருத்துவ ஆசிரியர் பெர்குஸ் வால்ஷ் தெரிவித்துள்ளார்.

பிரிட்டனின் பிரதமர் இந்த நற்செய்தியை வரவேற்றி ருக்கிறார், அதோடு நோவாவேக்ஸ் தடுப்பு மருந்தை பிரிட்டனின் மருந்து நெறிமுறையாளர்கள் மதிப்பிடு வார்கள் எனவும் கூறியுள்ளார்.

பிரிட்டன், இந்த புதிய நோவாவேக்ஸ் தடுப்பு மருந்திலும் 60 மில்லியன் டோஸ்களை பதிவு செய்திருக் கிறது. இந்த மருந்து இங்கிலாந்திலிருக்கும் ஸ்டாக்டன் நகரில் தயாரிக்கப்படும்.

ஒருவேளை இந்த மருந்துக்கு பிரிட்டனின் மெடி சின்ஸ் அண்ட் ஹெல்த்கேர் ப்ராடெக்ட்ஸ் ரெகுலேட் டரி ஏஜென்சி (பிரிட்டனின் மருந்து கட்டுப்பாட்டு முகமை) அனுமதி வழங்கினால், நோவாவேக்ஸ் உற் பத்தி செய்யப்பட்டு, இந்த ஆண்டின் பிற்பகுதியில் வழங்கப் படும் என எதிர்பார்ப்பதாக பிரிட்டன் அரசு கூறுகிறது.

ஒக்ஸ்போர்ட் - ஆஸ்ட்ராசெனீகாவின் தடுப்பு மருந்து, பிசர் - பயோஎன்ரெக், மொடர்னா என இதுவரை பிரிட்டன் மூன்று தடுப்பூசிகளுக்கு அனுமதி வழங்கி இருக்கிறது.

18 முதல் 84 வயது வரையிலான பல்வேறு வயது டையவர்கள் அடங்கிய, 15,000 பேர் கலந்து கொண்ட மூன்றாம் கட்ட மருத்துவ பரிசோதனையில், கொரோனா வைரஸுக்கு எதிராக நோவாவேக்ஸ் தடுப்பூசி 89.3 வீத செயல்திறனைக் காட்டியிருக்கிறது. இதில் 27 சதவீதத்தினர் 65 வயதுக்கு மேற்பட்டவர்கள் என நோவாவேக்ஸ் கூறியுள்ளது.

கொரோனா வைரஸின் தென்னாபிரிக்கத் திரிபால் பாதிக்கப்பட்டவர்கள் அதிகம் பங்கெடுத்த பரிசோத னையில், எச்.ஐ.வி தொற்றால் பாதிக்கப்படாதவர் களிடம் 60 சதவீதம் செயல்திறனைக் காட்டியிருக்கிறது.

“பிரிட்டனில் நடத்தப்பட்ட சோதனைகளின் முடிவுகள் நாங்கள் நம்பியது போல பிரமாதமாக இருந்தது. அதே நேரத்தில் தென் ஆப்பிரிக்காவில் நடத்தப்பட்ட சோதனையில் மருந்தின் செயல்திறன் மக்கள் எதிர்பார்த்ததை விட அதிகமாகவே இருந்தது,” என்கிறார் நோவாவேக்ஸின் முதன்மைச் அதிகாரியான ஸ்டான் எர்க்.

“நோவாவேக்ஸ் மருந்துக்கு பிரிட்டனின் மருந்து மற்றும் சுகாதார பொருட்கள் ஒழுங்கு கட்டுப்பாட்டு முகமை அனுமதி வழங்கிய பின் ஸ்டாக்டன்னில் இருக்கும் உற்பத்தி ஆலையில், அதன் உற்பத்தி மார்ச் அல்லது ஏப்ரல் மாதத்தில் தொடங்கப்படும்,” என பிபிசியிடம் கூறினார் எர்க்.

**‘வைரஸ்’க்கு எதிரான மற்றொரு ஆயுதம்’**

நோவாவேக்ஸ் அனுமதிக்கப்பட்டால் அதை உடனடியாக நடைமுறைக்குக் கொண்டு வர பிரிட்ட னின் தேசிய சுகாதார சேவை தயாராக இருப்பதாக பிரிட்டனின் சுகாதாரச் செயலர் மேட் ஹென்காக் கூறினார்.

“இது ஒரு நற்செய்தி. நோவாவேக்ஸுக்கு பிரிட்டனின் மருந்து மற்றும் சுகாதார பொருட்கள் ஒழுங்கு கட்டுப்பாட்டு முகமை அனுமதி வழங்கினால், பிரிட்டனின் தடுப்பூசித் திட்டத்துக்கு மிகப் பெரிய ஊக்குவிப்பாக இருக்கும். கொரோனா வைரஸை எதிர் கொள்ள நமக்கு மற்றொரு ஆயுதம் கிடைத்தது போலி ருக்கும்,” எனக் கூறினார் ஹென்காக்.

“பிரிட்டன் மற்றொரு அரிய மருத்துவ கண்டுபிடிப் பின் விளிம்பில் இருப்பதை நினைத்துப் பெருமை அடைகிறேன். விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் நோவாவேக்ஸ் பரிசோதனையில் பங்கெடுத்த




ஆயிரக் கணக்கான தன்னலமற்ற தொண்டர்களுக்கும் என் நன்றியை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்” என அவர் மேலும் தெரிவித்தார்.

“நோவாவேக்ஸ் தடுப்பூசி பரிசோதனையில் பல வியப்பான விடயங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின் றன. இது அதிக செயல்திறன் கொண்ட பாதுகாப்பான கொரோனா தடுப்பு மருந்து. குறிப்பாக அதிவேகமாக பரவக் கூடிய கொரோனா வைரஸின் பிரிட்டன் திரிபுக்கு எதிராக இந்த தடுப்பு மருந்து அதிக செயல்திற னோடு இருக்கிறது,” என்கிறார் நோவாவேக்ஸ் தடுப்பு மருந்தின் முதன்மை ஆய்வாளராக இருக்கும் பேராசிரியர் பால் ஹீத்.

“பிரிட்டனில் நடத்திய சோதனையில் நோவாவேக்ஸ் அதிக பாதுகாப்பை வழங்குவது நல்ல விஷயம் தான், ஆனால் தென் ஆப்பிரிக்காவில் நடத்திய சோதனையில் குறைந்த அளவிலேயே பாதுகாப்பு வழங்குவது தான் கவலையளிக்கிறது,” என்கிறார் இம்பீரியல் கொலிஜ் ஒப் லண்டனைச் சேர்ந்த சோதனை மருத்துவப் பேராசிரியர் பீற்றர் ஓபன்ஷா.

பிரிட்டனை பொறுத்தவரை ஒக்ஸ்போர்ட் - ஆஸ்ட்ராசெனீகா தடுப்புமருந்து மொத்தம் 100மில்லி யன் டோஸ், பிசர் - பயோஎன்ரெக் தடுப்பு மருந்து 40மில்லியன் டோஸ்களும் கோரப்பட்டுள்ளன.

மேலும் பிரிட்டனின் மருந்து மற்றும் சுகாதார பொருட்கள் ஒழுங்கு கட்டுப்பாட்டு மையத்தால் ஒப்புதல் வழங்கப்பட்ட மாடர்னா மருந்து 17 மில்லியன் டோஸ்களில் வசந்த காலத்தில் வந்து சேரும்.

இந்த நோவாவேக்ஸ் தடுப்பு மருந்து பிரிட்ஜ் வெப்ப நிலையில் வைக்க கூடியது என்பது குறிப்பிடத்தக்கது.

**- ஜெய்.**

“நோவாவேக்ஸ் தடுப்பூசி பரிசோதனையில் பல வியப்பான விடயங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின் றன. இது அதிக செயல்திறன் கொண்ட பாதுகாப்பான கொரோனா தடுப்பு மருந்து. குறிப்பாக அதிவேகமாக பரவக் கூடிய கொரோனா வைரஸின் பிரிட்டன் திரிபுக்கு எதிராக இந்த தடுப்பு மருந்து அதிக செயல்திறனோடு இருக்கிறது”

# அமெரிக்காவில் தீவிர பாதுகாப்பு எச்சரிக்கை

நவம்பர் 2020 இல் நடந்து முடிந்த தேர்தலில் பைடன் வெற்றி பெற்றதில் அதிருப்தி அடைந் திருக்கும் சிலர், அமெரிக்காவில் மீண்டும் தாக்குதல் நடத்தலாம் என அமெரிக்காவின் பாதுகாப்பு அதிகாரிகள் அதீத எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த ஜனவரி 6ஆம் திகதி அமெரிக்க பாராளு மன்றக் கட்டட தாக்குதலை நடத்திய சில ட்ரம்ப் ஆதரவாளர்களால், தீவிரமாக தங்கள் கருத்தை நம்பக் கூடியவர்கள் ஊக்குவிக்கப்பட்டிருக்கலாம் என அமெ ரிக்க உள்நாட்டு பாதுகாப்புத் துறை தெரிவித்துள்ளது.

அரசு தன் அதிகாரத்தைப் பயன்படுத்துவதில் வெறுப்படைந்திருக்கும் சில தனி நபர்கள், மீண்டும் தாக்குதலை நடத்தலாம் என எச்சரித்திருக்கிறது அமெரிக்க உள்நாட்டு பாதுகாப்புத் துறை.

ஆனால் எங்கு தாக்குதல் நடக்க வாய்ப்பிருக்கிறது, எப்படி நடக்க வாய்ப்பிருக்கிறது போன்ற தகவல்கள் இல்லை எனக் குறிப்பிட்டிருக்கிறது.

கடந்த ஜனவரி 6ஆம் திகதி, அமெரிக்க பாராளு மன்றக் கட்டடத்தில் ஜோ பைடனின் வெற்றியை உறுதிப்படுத்தும் பணியிலிருந்தபோது அக்கட்டடம் தாக்குதலுக்கு உள்ளானது.

அதற்கு முன், முன்னாள் அதிபர் டொனால்ட் ட்ரம்ப், வெள்ளை மாளிகைக்கு வெளியில், தன் ஆயிரக்கணக்கான ஆதரவாளர்களுக்கு மத்தியில் விரும்பத்தகாத வகையில் உரையாற்றினார். அவ்வுரையில் அமெரிக்க அதிபர் தேர்தல் திருடப்பட்டுவிட்டது எனவும் குறிப்பிட்டார்.

”நீங்கள் கடுமையாகப் போராடவில்லை எனில், இதற்கு மேல் உங்களுக்கு ஒரு நாடே இருக்காது,” என அவ்வுரையில் கூறினார்.

அதன் பிறகு தான் ட்ரம்பின் ஆதரவாளர்கள், கப்பிட்டல் கட்டடத்தை நோக்கிச் சென்று, பாது காப்பு வீரர்களைக் கடந்து, பாராளுமன்றக் கட்டடத்தில் நுழைந்தார்கள். ஒரு காவலர் உட்பட ஐந்து பேர் அச்சம்பவத்தால் உயிரிழந்தார்கள்.

கப்பிட்டல் கட்டட தாக்குதல் தொடர்பாக, அமெரிக்காவின் பிரதிநிதிகள் சபை, ட்ரம்புக்கு எதிராக கண்டனத் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கி றது. அமெரிக்க செனட் சபையில் அடுத்த மாதம் ட்ரம்ப் மீது விசாரணை தொடங்கவிருக்கிறது.

கடந்த வாரம் அதிபர் ஜோ பைடன் வெற்றிகர மாகப் பதவியை ஏற்றுக் கொண்டார். அதனைத் தொடர்ந்து அடுத்தடுத்த வாரங்களில் தாக்குதல் நடத்தப்படலாம் என கொடுத்த ஆலோசனைக் குறிப்பில் எச்சரித்திருக்கிறது அமெரிக்க உள்நாட்டு பாதுகாப்புத் துறை.

”அரசு தன் அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கு எதிராகவும், அதிபர் பதவி கைமாறியதற்கு எதிராகவும், வேறு சில தவறான நோக்கங்களின் காரணமாகவும், சித்தாந்த ரீதியாக ஊக்கப்படுத்தப்பட்டவர்கள் தாக்கு தலில் ஈடுபடலாம் என அந்த விவரங்கள் கூறுகிறது,” என அமெரிக்க பாதுகாப்புத் துறை கொடுத்த குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

கடந்த ஓராண்டு காலத்தில் அமெரிக்க உள்நாட்டு பாதுகாப்புத் துறை, இப்படி வெளிப்படையாக எச்சரிக்கை கொடுத்ததில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

# ஐ.நா. அறிக்கை ஒருதலைப்பட்சமானது

## தமிழ் பேசும் மக்களை அரசாங்கம் புறக்கணித்ததா? ஏற்றுக்கொள்ள முடியாது என்கிறார் சரத் வீரசேகர



கொழும்பு,ஜன.30

**இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வெளியிட்டுள்ளஅறிக்கை ஒருதலைப்பட்சமானது. தமிழ் பேசும் மக்களை அரசாங்கம் புறக்கணித்துள்ளது எனச்சுட்டிக்காட்டியுள்ளதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.**

**இல்லாத பிரச்னைகளை இருப்பதாகக் குறிப்பிட்டுக் கொண்டு ஒரு தரப்பினர் சர்வதேச அரங்கில் இலாப மடைகிறார்கள் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர குற்றம்சாட்டியுள்ளார்.**

இலங்கை தொடர்பில் ஐ.நா. ஆணையாளர் வெளியிட்டுள்ள அறிக்கை தொடர்பில் வினவிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர், இலங்கை தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கை நாட்டின் சுயாதீனத் தன்மைக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் உள்ளது.

அவரின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் ஒருதலைப்பட்சமான கொள்கை அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது என்பதை அறியமுடிகின்றது.

தமிழ் பேசும் மக்களை அரசாங்கம் புறக்கணித்துச் செயல்படுவதாகக் குறிப்பிட்டுள்ளமையை ஏற்றுக்கொள்ள முடியாது. 2019ஆம் ஆண்டு ஆட்சியமைத்த இந்த அரசாங்கம் இனவாதத்தை அடிப்படையாகக் கொண்டு செயல்படவில்லை.

அனைத்து இன மக்களுக்கும் அனைத்து நிலைகளிலும் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. கடந்த அரசாங்கம் இன நல்லிணக்கம் என்று செய்த தவறுகளை திருத்தும் போது அதனை இன புறக்கணிப்பு என்று கருதுவது தவறான நிலைப்பாடாகும்.

30 வருட கால சிவில் யுத்தம் முடிவடைந்த பிறகு அரசாஙகம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அபிவிருத்திப் பணிகளைத் துரிதப்படுத்தியது.

இறுதிக்கட்ட யுத்தத்தில் மனித உரிமை, மீறல் இடம்பெற்றன எனக் குற்றம்சாட்டப்பட்டன. சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்கான விசாரணை நடவடிக்கைகள் அக்கால கட்டத்தில் உள்ளகப் பொறிமுறை மூலம் முன்னெடுக்கப்பட்டன.

2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற்படுத்தப்பட்டது. ஆட்சி மாற்றத்துக்கு மேற்குலக நாடுகள் பாரிய பங்களிப்பு செய்தன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக 30/1 பிரேரணை கொண்டுவரப்பட்டது. 30/1 பிரேரணையில் உள்ளடக்கப்பட்ட பல விடயங்கள் இலங்கையின் அரசமைப்புக்கும், சுயாதீனத்தன்மைக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை நன்கு அறிந்தும் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர பிரேரணைக்கு இணை அனுசரணை வழங்குவதாக தனது தனிப்பட்ட விருப்பத்தை அரசாங்கத்தின் தீர்மானமாகத் தெரிவித்தார். இதன் தாக்கம் இன்றும் தொடர்கின்றது- என்றார். (எ)



## படையினருக்கு முதலில் தடுப்பூசி

இந்தியாவிலிருந்து நேற்று முன்தினம் கொண்டுவரப்பட்ட ஒக்ஸ்போர்ட் -அஸ்ட்ராஜெனேகா கொரோனா தடுப்பூசிகள் செலுத்தும் நடவடிக்கை நேற்றுக் காலை நாரஹேன்பிட்டி இராணுவ வைத்தியசாலையில் ஆரம்பமானது.

இதன்படி முதலாவது தடுப்பூசி டோஸ்கள் இராணுவத்தினருக்குச் செலுத்தப்பட்டது.

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று நோயைத் தடுக்கும் விதமாக இந்தியாவிலிருந்து நேற்றுமுன்தினம் இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட ஒக்ஸ்போர்ட் -அஸ்ட்ராஜெனேகா கொரோனா தடுப்பூசிகள் நேற்று முதல் ஆறு வைத்தியசாலைகளில் வழங்கப்படுகின்றன.

சுகாதாரப் பணியாளர்கள், இராணுவத்தினர் மற்றும் பொலிஸாருக்கு முதல் கட்டத்தில் இந்தத் தடுப்பூசிகள் வழங்கப்படவுள்ளன. (எ)

### சஹ்ரானை இயக்கியது யார்?

## ஈஸ்டர் தாக்குதலை பொறுப்பேற்க "மாத்தளை சஹ்ரான்" முயற்சி

கொழும்பு,ஜன.30

உயிர்த்த ஞாயிறு தின தொடர் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களுடன் ஐ.எஸ்.ஐ.எஸ். சர்வதேச பயங்கரவாத அமைப்பு நேரடித் தொடர்புபடவில்லை என்பதும், தாக்குதலின் பின்னர் அதற்கான பொறுப்பை அந்த அமைப்பு ஏற்பதற்கான நடவடிக்கைகளை "மாத்தளை சஹ்ரான்" எனும் சந்தேக நபரே முன்னெடுத்திருந்தார் என விசாரணைகளில் வெளிப்பட்டுள்ளது.

தனது ஆலோசனைகளின் கீழ் சி.ஐ.டியின் டிஜிற்றல் கணனிக்குற்றம் மற்றும் சைபர் குற்றங்கள் தொடர்பிலான விசாரணைப் பிரிவை மேற்பார்வை செய்யும்சிரேஷ்ட பெண்பொலிஸ் அத்தியட்சகர் தர்ஷிகா குமாரி, பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் சேனாரத்ன ஆகியோரின் குழுவினர் முன்னெடுத்த விசாரணைகளில் இது தெரியவந்துள்ளது என சி.ஐ.டியின் முன்னாள் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகர கூறினார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் சாட்சியமளிக்கும் போது, அவர் சார்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி உபுல் குமாரப்பெருமவின் கேள்விகளுக்குப் பதிலளித்து சாட்சியமளிக்கும் போதே அவர் இதனை வெளிப்படுத்தினார்.

'இவ்விசாரணைகளில் மாத்தளை சஹ்ரான் எனும் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தார். அவரே ஐ.எஸ். ஐ.எஸ். தாக்குதலின் பின்னர் தொடர்புகொண்டிருந்தமை விசாரணைகளில் தெரியவந்தது. தாக்குதலுக்குப் பொறுப்பு ஏற்க அப்பயங்கரவாத அமைப்புக்கு கோரிக்கையானது அவர் மூலம் சென்றுள்ளது.

இந்நிலையில் இந்த சந்தேக நபர் தொடர்பில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தர்ஷிகா குமாரி, பிரதான பொலிஸ்பரிசோதகர் சேனாரத்ன ஆகியோர் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இதன்போது, "சொனிக் சொனிக்" எனும் புனைப் பெயரில் செயல்படும் தேசிய உளவுச் சேவை அதிகாரி ஒருவரால் குறித்து தகவல் வெளிப்பட்டது. குறித்த அதிகாரி மாத்தளை சஹ்ரானுடன் நெருங்கிய தொடர்பில் இருந்துள்ளார்.

இந்நிலையில் அவரிடம் வாக்கு மூலம் பெற சி.ஐ.டி. அதிகாரிகள் சென்ற போது, தேசிய உளவுச் சேவை பணிப்பாளர் உள்ளிட்டோர் அதற்கு எதிர்ப்பு வெளியிட்டிருந்தனர். இந்நிலையில் சொனிக் சொனிக் எனும் புனைப்பெயர் கொண்ட அதிகாரியிடம் விசாரித்து வாக்கு மூலம் பெற நான் தலையீடு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது" எனத் தெரிவித்தார்.

முன்னதாக ஆணைக்குழுவில் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ஷமில் பெரேரா எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த ஷானி அபேசேகர,

'இந்தத் தாக்குதலுடன் ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்புக்கு நேரடித் தொடர்பில்லை என அப்போது விசாரணைகளில் தெரியவந்தது. வெளிநாட்டு உளவுச் சேவைகள், விசாரணைப் பிரிவுகள் மற்றும் இன்டர்போல் எனும் சர்வதேச பொலிஸாரின் ஒத்துழைப்புடன் இவ்விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

எனினும் இத்தாக்குதலை நெறிப்படுத்தியவர் யார் எனும் கேள்வி இன்றும் தொடர்கிறது. காரணம், எந்தவொரு பயங்கரவாத அமைப்பினதும் தலைவர் முதல் அணியிலேயே தானும் தற்கொலை செய்துகொண்டதாக வரலாறு இல்லை. எனவே சஹ்ரானை இயக்கியவர் யார் என்ற கேள்வி இன்னும் உள்ளது" எனத் தெரிவித்தார். (எ)



## எதிர்க்கட்சி தலைவர் சஜித் நோர்வே தூதுவர் சந்திப்பு

கொழும்பு,ஜன.30

இலங்கைக்கான நோர்வே தூதுவர் திரினா யுரான்லி எஸ்கடெல் நேற்று முன்தினம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை சந்தித்து இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளைப் பேணுவதன் முக்கியத்துவம் தொடர்பில் கலந்துரையாடினார். (எ)

## தீவிர சிகிச்சை பிரிவுக்கு மாற்றப்பட்டார் பவித்ரா

கொழும்பு,ஜன.30

சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி அங்கொடையில் அமைந்துள்ள தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான அமைச்சர் பவித்ரா, ஹிக்கடுவவிலுள்ள ஒரு சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை பெற்று வந்தார். இந்நிலையில் நேற்று முன்தினம் காலை அவர் கொழும்பின் புறநகர் பொரலஸ்கமுவையில் அமைந்துள்ள சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

எனினும் அவர் அதிகளவான கொரோனா அறிகுறிகளை வெளிப்படுத்தியதால் நேற்று முன்தினம் மாலை தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலையின் தீவிர



சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

எவ்வாறெனினும் அவர் நன்றாகக் குணமடைந்து வருகிறார் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இந்நிலையில் அவரது கணவர் காஞ்சனா ஜெயரத்ன மற்றும் அவரது மகள் மீது நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட இரண்டாவது சோதனைகளில் கொரோனாவுக்கு எதிர்மறையான முடிவுகளை வெளிப்படுத்தியுள்ளனர். (எ)

# ஜெனிவாவில் இம்முறை தமிழர்களுக்குத் தீர்வு

## சிறிநேசன் நம்பிக்கை

மட்டக்களப்பு,ஜன.30

**ஜெனிவாவில் இம்முறை நடைபெறவுள்ள 46 ஆவது மனிதவுரிமை கூட்டத் தொடரில் தமிழர்களின் போராட்டத்துக்கு உரிய தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் தெரிவித்துள்ளார்.**

மட்டக்களப்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்ட அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

“தமிழர்களின் வரலாற்றில் இனப் படுகொலையென்பது தொடர்கதையாக நடந்திருக்கின்றது. 1958ஆம் ஆண்டில் முதற்தடவையாக தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலை தென்னிலங்கையில் அரங்கேற்றப்பட்டது. அதற்கு அடுத்ததாக இனப்படுகொலையானது வடக்கு- கிழக்கில் மையங்கொண்டிருந்தது. அந்த அடிப்படையில் ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழர்கள் காரணங்களில்லாமல் கொல்லப்பட்டனர்.

அந்த வரிசையில் கொக்கட்டிச்சோலை படுகொலையானது நான் ஆசிரியராக இருந்த 1987 ஆம் ஆண்டு காலத்தில் நடந்தது. 157அப்பாவிகள் அரச உத்தியோகத்தர்கள் என்றும் பாராமல் படுகொலை செய்யப்பட்டனர். இதுவரை பொறுப்புக்கூறல் நடைபெறவில்லை, உண்மை கண்டறியப்படவில்லை, நீதி வழங்கப்படவில்லை. இவ்வாறான சம்பவங்கள் மீள நிகழாதிருப்பதற்கான உத்திகள் கையாளப்படவில்லை. நிரந்தர அமைதிக்கான அரசியல் தீர்வு கண்டுபிடிக்கப்படவில்லை.

நீண்டகாலமாக உள்நாட்டுப் பொறிமுறை மூலமாக எதையும் தீர்க்க முடியாத, கையாளாகாத நிலையில் அரசாங்கம் காணப்பட்டது. உள்நாட்டுப் பொறிமுறை பலவீனமுற்றிருந்த காரணத்தால் உள்நாட்டில் எதையும் சாதிக்க முடியாத நிலை இன்று உள்நாட்டில் முடித்து வைக்கப்பட வேண்டிய பொறுப்புக்கூறல், உண்மையைக் கண்டறிதல், நீதியை வழங்குதல், மீள நிகழாமல் தடுத்தல் போன்ற செயன்முறைகள் எமது கையிலிருந்து சர்வதேச மட்டத்துக்கு கொண்டு செல்லப்பட்டிருக்கின்றது என்றால் இதற்கான முக்கிய பொறுப்பை அரசாங் கம் எடுக்க வேண்டும். அரசு இந்த விடயத்தை உள்நாட்டில் முடித்திருந்தால் இந்த விடயங்கள் சர்வதேசமயப்பட்டிருக்காது.

இன்று மனித உரிமை ஆணையாளர் (மிசெல் பச்லெட்) இந்த விடயத்தில் கூடுதலானகரிசனை செலுத்தியிருக்கின்றார். நீண்டகாலமாக தமிழர்களுக்கு கிடைக்காத நீதி, உண்மையைக் கண்டறிதல் விடயங்க ளில் இப்போது கடும் தொனியில் அவர் சொல்லியிருக் கின்றார்.

எங்களுக்கு அரசர்கள் நீதியைத் தராதுவிட்டாலும் தெய்வம் மூலம் நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு எமது தமிழ்த் தேசியக் கட்சிகள் இம்முறை கருத்தொருமைப்பாட்டோடு ஒன்றாக இணைந்து செயல்பட்டார்கள். புலம்பெயர் அமைப்புகளும் இதற்கான வேலைகளை நேர்த்தியாக செய்தார்கள். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளும் பாதிக்கப்பட்ட மக்களும் மனிதவுரிமை செயல்பாட்டாளர்களும் போராட்டங்களை நடத்தினர். ஒட்டுமொத்தமாக இந்தப் போராட்டத்துக்கு நம்பிக்கை தரக்கூடிய ஒரு கீற்றொளி 46 ஆவது மனிதவுரிமை கூட்டத் தொடரில் நாங்கள் அறியக் கூடிய நிலைமைக்கு வந்திருக்கின்றது- என்றார். (எ)



# திருகோணமலை நகரசபை உறுப்பினர் நேற்று அடையாள உண்ணாவிரதம்

திருகோணமலை,ஜன.30

திருகோணமலை நகர சபையின் கீழ் மீண்டும் திருகோணமலை மொத்த மீன் சந்தை கொண்டு வரப்படவேண்டும். அதன் வரிப்பணம் நகர சபைக்கே செலுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து திருகோணமலை நகர சபை உறுப்பினர் சி.சிவகுமார் (சத்தியன்) நேற்றுக்காலை 8 மணியளவில் நகர சபை முன் அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்தார். (எ)

# ஜனநாயக ரீதியான போராட்டத்துக்கு அனைவரும் ஆதரவு வழங்க வேண்டும்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அழைப்பு

மட்டக்களப்பு,ஜன.30

வடக்கு - கிழக்கு சிவில் அமைப்புக்கள் முன்னெடுக்கும் ஜனநாயக ரீதியான போராட்டத்துக்கு வடக்கு - கிழக்கிலுள்ள அனைத்துக் கட்சிகளும், அமைப்புக்களும் ஆதரவு வழங்க முன்வரவேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஷ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மட்டக்களப்பிலுள்ள அவரது அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

“வடக்கு - கிழக்கில் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்படும் அடக்குமுறைகளுக்கு எதிராகவும் அவற்றை சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையிலும் முன்னெடுக்கும் இந்தப் போராட்டத்துக்கு அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

மேலும் பாதிக்கப்பட்டிருக்கின்ற மக்களுக்கு ஒரு நீதி கிடைக்க வேண்டும் என்பதற்காகவும் வடக்கு - கிழக்கில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற தீவிரமான நில ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தக் கோரியும் தமிழ் மக்களின் கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களைப் பேணுகின்ற இடங்கள் சிதைக்கப்படுவதைத் தடுக்கும் முகமாகவும் பாதிக்கப்பட்டிருக்கின்ற மக்கள் சார்பாக ஐ.நா. மனிதவுரிமைப் பேரவையில் அரசியல் கட்சிகளாலும் சிவில் அமைப்புக்களாலும் ஒருங்கிணைக்கப்பட்டு, எங்களுடைய மக்களுக்கான நிரந்தரத் தீர்வை பெறுவதற்காக முன்



வைக்கப்பட்டிருக்கின்ற பிரேரணையை வலுப்படுத்தும் முகமாகவும் வடக்கு - கிழக்கில் எதிர்வரும் 3ஆம் திகதி முதல் 6ஆம் திகதி வரை ஜனநாயக ரீதியான ஒரு போராட்டத்தை முன்னெடுக்கப் போவதாக அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள்.

ஆகவே, இந்தப் போராட்டத்துக்கு அரசியல் பேதங்களை மறந்து தமிழர்கள் என்ற அடிப்படையில் வர்த்தக அமைப்புக்கள், பொது அமைப்புக்கள், மதகுருமார்கள் என அனைவரும் ஒத்துழைப்பை வழங்க வேண்டும்”- என்றார். (எ)

# நாட்டின் பல பகுதிகளில் இடியுடன் கூடிய மழை

கொழும்பு,ஜன.30

வடக்கு- கிழக்கு, வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலும் மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின் றது என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களிலும் மாத்தளை மற்றும் பொலநறுவை மாவட்டங்களிலும் சில இடங்களில் 100 மில்லி மீற்றர் அளவான பலத்த மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் சில இடங்களில் பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

தென் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் களுத்துறை மாவட்டத்திலும் சில இடங்களில் 75 மில்லி மீற்றர் அளவான ஓரளவு பலத்த மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

மேல், மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் காலை வேளையில் பனிமூட்டமான நிலை எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை குறைத்துக்கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புக்களில் காற்றானது வட கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும். கொழும்பிலிருந்து புத்தளம் ஊடாக காங்கேசந்துறை வரையான கடற்பரப்புக்களிலும் அம்பாந்தோட்டையிலிருந்து பொத்துவில் வரையான கடற்பரப்புக்களிலும் காற்றின் வேகமானது 20-30 கிலோ மீற்றர் வரை காணப்படுவதுடன் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40-50 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

கொழும்பிலிருந்து புத்தளம் ஊடாக காங்கேசந்துறை வரையான கடற்பரப்புக்களும் அம்பாந்தோட்டையிலிருந்து பொத்துவில் வரையான கடற்பரப்புக்களும் அவ்வப்போது ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும்.

நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புக்கள் மிதமான அலையுடன் காணப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# 5ஆம் ஆண்டு மாணவனுக்கு கொரோனா

மட்டக்களப்பு,ஜன.30

மட்டக்களப்பு நகரிலுள்ள கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்தில் 5 ஆம் ஆண்டு மாணவனுக்கு கொரோனா வைரஸ் தொற்று நேற்றுக் காலை உறுதி செய்யப்பட்டுள்ளது .

இந்த மாணவனுக்கு தொற்று உறுதியானதையடுத்து அந்த மாணவனின் வகுப்பில் கற்கும் 30 மாணவர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர். தொற்றுக்குள்ளான மாணவனின் தந்தை தாதி உத்தியோகத்தர். அவர் ஏற்கனவே கொரோனா தொற்றுக்குள்ளாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)





# இறைச்சி பதப்படுத்தும் வாயு கசிவு: அமெரிக்காவில் அறுவர் உயிரிழப்பு

நியூயோர்க், ஜன. 30

அமெரிக்காவின் - ஜோர்ஜியாவில் கோழி இறைச்சி பதப்படுத்தும் தொழிற்சாலையில் திரவ நைதரசன் வாயுக் கசிவு ஏற்பட்டதால் 6 பேர் உயிரிழந்தனர்.

கெய்னஸ்வில்லி நகரில் உள்ள அறக்கட்டளை உணவுக் குழு தொழிற்சாலையிலேயே நேற்றுமுன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஜோர்ஜியா மாநிலம் கோழி இறைச்சியை பதப்படுத்தி ஏற்றுமதி செய்வதில் முன்னிலை வகிக்கும் மாநிலமாகும். இங்கு, பல தொழிற்சாலைகள் உள்ளன.

கெய்னஸ்வில்லி பிரைம் பார்க் உணவுகள் என்று அழைக்கப்பட்ட இந்த தொழிற்சாலையில் வியாழக்கிழமை பதப்படுத்துவதற்காக சேமித்து வைக்கப்பட்ட திரவநிலை நைதரசன் வாயு தாங்கியிலிருந்து கசிவு ஏற்பட்டது.

இதனால், 130 பேர் பாதிக்கப்பட்டனர். மருத்துவ உதவிக்காக தேவாலயம் ஒன்றுக்கு இவர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். இதில் ஐவர் உயிரிழந்தனர். ஒருவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற நிலையில் உயிரிழந்தார்.

எனினும், மருத்துவமனையில் சிகிச்சை பெறுபவர்களில் மூவர் ஆபத்தான நிலையில் உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# விவசாயிகள் போராட்டத்தில் அடக்குமுறைகள் பிரயோகம்!

## விவசாயிகள் மீது பொலிஸார் தடியடி தண்ணீர், மின்சார விநியோகம் நிறுத்தம்

புதுடில்லி, ஜன.30

**இந்தியாவின் டில்லி எல்லையான சிங்குவில் போராடும் விவசாயிகள் மீது பொலிஸார் தடியடி நடத்தினர். அத்துடன் அந்தப் பகுதியை விட்டும் வெளியேறுமாறும் மிரட்டல் விடுத்தனர்.**



இந்திய மத்திய அரசின் புதிய வேளாண் சட்டங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த ஆண்டு நவம்பர் 26ஆம் திகதி தொடக்கம் டில்லியின் எல்லைகளான காஜிப்பூர், சிங்கு, டிக்ரி ஆகிய பகுதிகளில் விவசாயிகள் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இதனால், கடந்த இரண்டு மாதங்களாக இந்த எல்லைகள் மூடப்பட்டுள்ளன. இந்நிலையில், டில்லி - உத்தரப்பிரதேச மாநில எல்லையான காஜிப்பூரில் போராடி வரும் விவசாயிகளை அங்கிருந்து வெளியேறுமாறு அந்த மாவட்ட நிர்வாகம் அறிவித்தது. இதற்கு விவசாயிகள் மறுப்புத் தெரிவித்து விட்டனர்.

இந்நிலையில், அப்பகுதியில் ஆயிரக்கணக்கான பொலிஸாரும், துணை இராணுவப் படையும் குவிக்கப்பட்டுள்ளனர். இதனால் அங்கு பற்றமான சூழல் நிலவுகின்றது.

இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்பு வெளியிட்டுள்ள விவசாயிகள் தற்கொலை செய்வோமே தவிர இந்த இடத்தை விட்டு வெளியேறமாட்டோம் என்றனர்.

இதையடுத்து வியாழன் இரவுக்குள் விவசாயிகள் வெளியேறவிடின் பலவந்தமாக அனுப்பப்படுவீர்கள் என்று எச்சரித்த உத்தரப்பிரதேச அரசு, அப்பகுதிக்கான தண்ணீர், மின்சாரம் விநியோகத்தை நிறுத்தியது.

இந்நிலையில், சிங்கு எல்லைப் பிரதேசத்தில் போராடும் விவசாயிகள் வெளியேற வேண்டும் என்று அப்பிரதேச மக்களில் ஒரு பகுதியினர் வலியுறுத்தினர். இதனால் இரு தரப்பினரிடையேயும் பிரச்னை எழுந்தது.

இதையடுத்து பொலிஸார் விவசாயிகள் மீது கண்ணீர் புகைக் குண்டுகளை வீசினர். அத்துடன் தடியடியும் நடத்தினர். இதனால் அப்பகுதியில் பதற்றம் நிலவியது. (ஐ)



# ஐ.நாவில் இந்தியாவுக்கு நிரந்தர உறுப்புரிமை

## வலியுறுத்துகிறார் அமெரிக்க ஜனாதிபதி

வாஷிங்டன், ஜன. 30

ஐக்கிய நாடுகள் சபையில் இந்தியாவுக்கு நிரந்தர உறுப்பினர் அந்தஸ்து வழங்க வேண் டும் என்று அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி ஜோ பைடன் வலியுறுத்தியுள்ளார்.

முன்னாள ஜனாதிபதிகளான ஜோர்ஜ் டபிள்யூ புஷ், பராக் ஒபாமா, டொனால்ட் ட்ரம்ப் ஆகியோரும் இதே கருத்தை வலியுறுத்தியிருந்தனர்.

தற்போது பைடனும் இந்தக் கருத்தை தெரிவித்துள்ளார். ஐக் கிய நாடுகள் சபையின் தூதர் லிண்டா தோமஸ் கிறீன் பீல் டிடமே ஜனாதிபதி பைடன் இக் கருத்தை வலியுறுத்தியுள்ளார்.

கடந்த ஆண்டு நடைபெற்ற தேர்தல் பிரசாரத்தின் போது இந்தியாவுக்கு ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் நிரந்தர உறுப்பு நாடு அந்தஸ்து வழங்க உதவுவோம் என்று பைடன் பிரசாரம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஆண்மைத் தன்மையை கொரோனா பறிக்கும்!

## ஆய்வில் புதிய தகவல்

பெர்லின், ஜன. 30

கொரோனா வைரஸ் தாக்கிய ஆண்களுக்கு ஆண்மை குறைவு ஏற்படும் என்று புதியஆய்வில் தெரியவந்துள்ளது.

உலகம் முழுவதும் பரவியுள்ள கொரோனா வைரஸ் மனித உடலில் எவ்வாறான பாதிப்புக்களை ஏற்படுத்து கின்றன என்பது குறித்து ஜேர்மனியின் ஜஸ்டஸ்லைபிக் பல்கலைக்கழகத்தை பேராசிரியர்களான சேர்ந்த பெக்சாத் மாலோகி மற்றும் பக்தியார் டார்டிபியன் ஆகிய இருவரும் ஆய்வு நடத்தினர்.

கொரோனா தாக்கிய 84 ஆண்களின் விந்தணுவை 60 நாட்களுக்கு 10 நாட்கள் இடைவெளியில் பகுப்பாய்வு செய்து, 105 ஆரோக்கியமான ஆண்களின் தரவுகளுடன் ஒப்பிட்டு இந்த ஆய்வை மேற்கொண்டனர்.

கொரோனா பாதித்த ஆண்களின் விந்து செல்களில் வீக்கம் மற்றும் ஒட்சிசனேற்ற அழுத்தம் அதிகரித்து காணப்பட்டுள்ளது. இந்த வேதியியல் ஏற்றத் தாழ்வு உடலில் உள்ள டி.என்.ஏ. மற்றும் புரதங்களை சேதப்படுத்தும்.

விந்தணுக்களில் ஏற்பட்டுள்ள இந்த விளைவுகள் அதன் தரம் மற்றும் கருவுறுதல் திறனுடன் தொடர்புடையவை. இது விந்தணு உற்பத்தியில் தாக்கத்தை ஏற்படுத்தும். ஆணின் இனப்பெருக்க அமைப்பானது கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்படும் பாதையாக கருதப்படவேண்டும். ஆபத்தான உறுப்பு என்று உலக சுகாதார அமைப்பால் அறிவிக்கப்பட வேண்டும் என்று விஞ்ஞானிகள் அறிவுறுத்தியுள்ளனர்.



# தடுப்பூசியை பெற்றார் ஐ.நா. பொது செயலர்!

நியூயோர்க், ஜன. 30

கொரோனா தடுப்பு மருந்தை போட்டுக் கொண்டது மகிழ்ச்சி அளிக்கிறது என்று ஐ. நா. பொதுச் செயலாளர் அன்ரனியோ குட்டரெஸ் தெரிவித்துள்ளார்.

71 வயதான அன்ரனியோ குட்டரெஸ் தனது வயதின் அடிப்படையில் நேற்று தடுப்பூசியை பெற்றுக் கொண்டார். நியூயோர்க்கில் 65 வயதுக்கு மேற்பட்டவர்கள் அனைவருக்கும் தற்போது தடுப்பூசி போடப்படுகின்றது. இதன் அடிப்படையிலேயே அவர் தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டார்.

அவர் ஊடகங்கள் முன்னிலையில் தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், கொரோனா தடுப்பு மருந்து அனைவருக்கும் கிடைக்கிறதா என்பதை நாம் உறுதிப்படுத்த வேண்டும். அனைவரும் தடுப்பூசியை போடுவதன் மூலம் தங்களையும் சமூகத்தையும் பாதுகாக்க முடியும் என்று அவர் தெரிவித்தார். (ஐ)

# தொழில் இழந்த பொறியியலாளர் இரு பெண்களை சுட்டுக்கொன்றார்

## பிரான்ஸில் நேற்று கொடூரம்

பாரிஸ், ஜன. 30

பிரான்ஸின் தென்கிழக்குப் பகுதியில் தொழில் இழந்த 45 வயதான முன்னாள் பொறியியலாளர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பெண் பணியாளர்கள் இருவர் உயிரிழந்தனர்.

குறுகிய நேர இடைவெளியில் வெவ்வேறு இடங்களில் அமைந்திருக்கும் இரண்டு பணியிடங்களுக்குள் துப்பாக்கியுடன் பிரவேசித்த அந்த நபர், கடமையில் இருந்த பெண்களைச் சுட்டுவிட்டுக் காரில் தப்பிச் செல்ல முற்பட்டபோது பொலிஸாரால் இடைமறித்துக் கைது செய்யப்பட்டார்.

வலோன்ஸ் நகரில் நேற்றுக் காலை “போல் எம்புளுவா“ எனப்படும் தொழில் தேடுவோரது நலன்களைக் கவனிக்கும் அரச முகவர் பணிமனைக்குள் முதலில் பிரவேசித்த அந்த நபர் திடீரென அங்கிருந்த முகவரான 53 வயதுடைய பெண்ணை தலையில் கைத்துப்பாக்கியால் சுட்டார். அதனால் அங்கிருந்தோர் பெரும் பீதியடைந்து பாதுகாப்புத் தேடி ஓடி ஒளிந்தனர். காயமடைந்த அந்தப் பெண் பின்னர் உயிரிழந்தார்.

அங்கிருந்து வெளியேறி அருகே உள்ள தொழிற்சாலை ஒன்றுக்கு சென்ற ஆயுததாரி அங்கு கடமையில் இருந்த மனித வள அலுவலரான இரண்டாவது பெண்ணைச் சுட்டுள்ளார். கழிவு அகற்றும் வாகனங்களைத் தயாரிக்கின்ற அத் தொழிற்சாலையில் அந்த நபர் முன்னர் பொறியியலாளராகப் பணியற்றிப் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் பணிநீக்கம் செய்யப்பட்டவர் என்று கூறப்படுகிறது.

கொல்லப்பட்ட இரண்டு பெண்களும் தாக்குதலாளிக்கு ஏற்கனவே அறிமுகமானவர்களா அல்லது முதலில் அவரை எதிர்கொண்டு உரையாடிய காரணத்தால் கொல்லப்பட்டார்களா என்பது தெரியவில்லை. (ஐ)



# அவுஸ்திரேலிய அணியில் இந்தியாவை சேர்ந்த வீரர்

சிட்னி, ஜன. 30

அவுஸ்திரேலியாவின் இருபது - 20 அணியில் இந்தியாவை சேர்ந்த தன்வீர் சங்கா தெரிவாகியுள்ளார்.

நியூசிலாந்துக்கு எதிரான இருபது -20 தொடரில் பங்கேற்கும் அவுஸ்திரேலிய அணி அறிவிக்கப்பட்டது. இதில், இந்தியவின் பஞ்சாப்பை மாநிலத்தை சேர்ந்த 19 வயது வீரர் தன்வீர் சங்கா இடம் பெற்றுள்ளார்.

தற்போது நடக்கும் பிக் பாஷ் இருபது -20 தொடர் லீக் சுற்று முடிவில் தன்வீர், 21 விக்கெட்களை சாய்த்தார். அதிக விக்கெட்கள் வீழ்த்தியவர்களில் ஷம்பா (19), ரஷித் கான் (16) ஆகியோரைப் பின்தள்ளி அவுஸ்திரேலிய அணிக்குத் தெரிவாகியுள்ளார்.

பஞ்சாப் மாநிலத்தை சேர்ந்த இவர் அவுஸ்திரேலியாவில் தனது தந்தையுடன் குடிபெயர்ந்தார். இவரது தந்தை வாகன ஓட்டுநராகப் பணி புரிந்து வருகிறார் என்பது குறப்பிடத்தக்கது. (ஐ)



# இலங்கை கிரிக்கெட் வீரர்களின் ஊதியத்தை குறைக்க முடிவு!

கொழும்பு, ஜன. 30

இலங்கை கிரிக்கெட் தனது தேசிய வீரர்களின் ஊதியத்தை குறைப்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

தற்போதைய வீரர்கள் ஒப்பந்தத்தின்படி, முதலாம் தர வீரருக்கு ஆண்டுக்கு ஒரு இலட்சத்து 25 ஆயிரம் டொலர்களும் இரண்டாம் மற்றும் மூன்றாம் தர வீரர்களுக்கு முறையே 80 ஆயிரம், 60 ஆயிரம் டொலர்களையும் ஊதியமாகப் பெறுகின்றனர்.

தவிர, ஒரு டெஸ்ட் போட்டியில் விளையாடுவதற்காக ஒரு வீரருக்கு மேலதிகமாக 5 ஆயிரம் டொலர்களும், அந்தப் போட்டியை இலங்கை வெல்லும்பட்சத்தில் அந்தத் தொகை 7 ஆயிரத்து 500 அமெரிக்க டொலர்களாகவும் வழங்கப்படுகிறது.

இந்த நிலையில் இலங்கை கிரிக்கெட் நிர்வாகத்தின் தலைவர் ஷம்மி சில்வா வீரர்களுக்கான எதிர்கால கொடுப்பனவுகள் செயல்திறனை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கும் என்று கூறியுள்ளார்.

இலங்கை 2018 முதல் 18 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி, அவற்றில் 11 போட்டிகளில் தோல்வியடைந்துள்ளது. நான்கு போட்டிகளில் மாத்திரமே வெற்றி பெற்றுள்ளது. இதேநேரம், குறித்த கால கட்டத்தில் 31 ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ள இலங்கை அணி 10 போட்டிகளில் மாத்திரம் வெற்றி பெற்று, 18 இல் தேல்வியடைந்துள்ளது.

இவ்வாறான பின்னணியிலேயே வீரர்களுக்கான ஊதியம் குறைக்கப்பட்டு, செயல்திறனை அடிப்படையாக கொண்ட ஒரு புதிய சூத்திரம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இதேவேளை இலங்கை விளையாட்டு வீரர்களுக்கு அவர்களின் திறன்களின் அடிப்படையில் ஊதியம் வழங்க புதிய திட்டம் ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளதாக விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட்

# சுழல்பந்து வீச்சாளர்கள் அசத்தல்; பாகிஸ்தான் அணி அபார வெற்றி!



கராச்சி, ஜன. 30

தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியை பாகிஸ்தான் அணி 7 விக்கெட்களால் வெற்றி கொண்டது.

பாகிஸ்தானுக்கு எதிராக 2 டெஸ்ட், 3 இருபது - 20 போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்பதற்காக தென்னாபிரிக்க அணி அந்நாட்டுக்கு சென்றுள்ளது.

முதலாவது டெஸ்ட் போட்டி, கடந்த 26ஆம் திகதி கராச்சியில் தொடங்கியது. நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

தொடக்க வீரரான டீன் எல்கர் போராடி 58 ஓட்டங்களை எடுத்தார். இதுவே அந்த அணியின் சார்பில் வீரர் ஒருவர் பெற்ற அதிக ஓட்டமாகும். ஏனைய வீரர்கள் சொற்ப ஓட்டங்களுக்குள் ஆட்டமிழக்க முதல்நாளிலேயே சகல விக்கெட்களையும் இழந்து 220 ஓட்டங்களைப் பெற்றது.

யசீர் ஷா 3, நயுமன் அலி, ஷா அபிரிடி ஆகியோர் தலா 2 விக்கெட்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணிக்கு பாவட் ஆலம் அதிரடியாக ஆடிசதம் அடித்தார். பஹீம் அஷ்ரப், அசார் அலி ஆகியோர் அரைச்சதம் அடித்தனர். இதனால் முதல் இனிங்ஸில் 378 ஓட்டங்களைக் குவித்து சகல விக்கெட்களையும் இழந்தது பாகிஸ்தான் அணி.

தென்னாபிரிக்காவின் பந்து வீச்சில் காகியோ ரபாடா, கேஷவ் மஹராஜ் ஆகியோர் தலா 3 விக்கெட்களையும் நோர்ட்ஜே, நிகிடி ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடியது தென்னாபிரிக்க அணி. தொடக்கம் கொடுத்த ஐடன் மார்க்ரம் அதிரடியாக ஆடி 74 ஓட்டங்களையும், வான் டேர் டுசன் 64 ஓட்டங்களையும், ரெம்பா பவுமா 40 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற அனைத்து விக்கெட்களையும் இழந்து 245 ஓட்டங்களைப் பெற்றது தென்னாபிரிக்க அணி.

பாகிஸ்தான் சார்பில் அசத்தலாக பந்துவீசிய நயுமன் அலி 5 விக்கெட்களைக் கைப்பற்றினர். அறமுகமான போட்டியிலேயே 7 விக்கெட்களை பெற்ற வீரர் என்ற பெருமையையும் அவர் பெற்றார். யசீர் ஷா 4 விக்கெட்களைக் வீழ்த்தினார்.

88 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலகு இலக்குடன் இரண்டாவது இனிங்ஸை தொடங்கியது பாகிஸ்தான் அணி. பாபர் அசாம் 30 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

22.5 ஓவர்களில் 3 விக்கெட்களை இழந்து 90 ஓட்டங்களைப் பெற்று 7 விக்கெட்களால் வெற்றி பெற்றது பாகிஸ்தான் அணி.

அஸார் அலி 31, பாவட் ஆலம் 4 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றனர்.

தென்னாபிரிக்க அணியின் சார்பில் நோரட்ஜே 2 விக்கெட்களையும், கேஷவ் மஹராஜ் ஒரு விக்கெட்டையும் இழந்தனர். போட்டியின் நாயகனாக பாவட் ஆலம் தெரிவானார். இதன் மூலம் இரு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் 1:0 என்ற கணக்கில் பாகிஸ்தான் அணி முன்னிலை பெற்றுள்ளது.

# தனிநபர் சாதனை முக்கியமா? - நடால்



மெல்பர்ன், ஜன. 30

'தனிநபர் சாதனை முக்கியம். ஆனால், அது நெருக்கடியாகவும், தொல்லையாகவும் அமைந்துவிடக் கூடாது," என்று நடால் தெரிவித்துள்ளார்.

ஸ்பெயின் ரென்னிஸ் வீரரான ரபெல் நடால், கிராண்ட்ஸ்லாம் ஒற்றையரில் அதிக பட்டம் வென்ற வீரர்கள் பட்டியலில் முதலிடத்தை சுவிற்சர்லாந்தின் ரோஜர் பெடரருடன் பகிர்ந்து கொண்டுள்ளார். இவர்கள் இருவரும் தலா 20 பட்டம் வென்றுள்ளனர்.


மெல்பர்னில் வரும் பெப். 8ஆம் திகதி தொடங்கவுள்ள நடப்பு ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாம் தொடரான அவுஸ்திரேலிய ஓப்பனில் நடால் பங்கேற்கிறார். முழங்கால் காயத்துக்கு 'ஒப்ரேஷன்' செய்தமையால் பெடரர் விளையாடவில்லை. இம்முறை நடால் சாதிக்கும் பட்சத்தில் அவுஸ்திரேலிய ஓப்பனில் தனது இரண்டாவது பட்டத்தையும், கிராண்ட்ஸ்லாம் அரங்கில் 21ஆவது பட்டத்தையும் கைப்பற்ற முடியும். இதன்மூலம் பெடரரை முந்தி முதலிடத்தைப் பிடிப்பார்.

இந்நிலையில், இதுபற்றி கூறிய நடால்:

ரென்னிஸ் அரங்கில் நான் நினைத்ததை விட அதிகமாக சாதித்துவிட்டேன். மேலும் ஒரு கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றால் சிறப்பாக இருக்கும். இது மட்டுமே என் வாழ்க்கையில் மகிழ்ச்சி அளிக்கப் போவதில்லை. என்னைப் பொறுத்தவரை சாதனை முக்கியமானது. ஆனால், அது கூடுதல் நெருக்கடியாவும், தொல்லையாகவும் அமைந்துவிடக் கூடாது என்பதில் மிகவும் கவனமாக இருக்கிறேன். எப்போதும் போல இயல்பான ஆட்டத்தை வெளிப்படுத்துவேன். கிண்ணம் வென்றாலும், தோல்வியடைந்தாலும் அதனை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்வேன். பெடரருடன் எனக்கு நல்ல நட்புறவு உள்ளது. அவர் மீது எனக்கு மிகுந்த மரியாதை எப்போதும் உண்டு. நாங்கள் இருவரும் விளையாடும் போது ஒருவரை ஒருவர் உற்சாகப்படுத்திக் கொள்வோம்."- என்றார். (ஐ)

# எமது சகல மாணவ, மாணவியரும் இராணுவ பயிற்சி பெற வேண்டும்

## சரத் வீரசேகரவின் கருத்தை வரவேற்கிறார் விக்னேஸ்வரன்



**யாழ்ப்பாணம்,ஜன.30**

**16 வயதிலிருந்து எமது சகல மாணவ, மாணவியரும் இராணுவப் பயிற்சி பெற வேண்டும். அவர்களுக்கு தமிழ் பேசும் அலுவலர்களே பயிற்சி கொடுக்க வேண்டும். ஆணைகள் தமிழிலேயே இருக்க வேண்டும் என யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர், வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

ஊடகங்களுக்கு நேற்று அவர் அனுப்பி வைத்துள்ள கேள்வி பதில் அறிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கேள்வி: பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர, இலங்கையில் கட்டாயமாக 18 வயதுக்கு மேற்பட்டோர் இராணுவப் பயிற்சி பெற வேண்டும் என்று கருத்து வெளியிட்டிருக்கின்றாரே. அது சம்பந்தமான உங்கள் கருத்து என்ன?

பதில்: வடக்கு- கிழக்கு தமிழர்களைப் பொறுத்த வரையில் நான் இந்தக் கருத்தை வரவேற்கின்றேன். ஆனால், 16 வயதிலிருந்து எமது சகல மாணவ, மாணவியரும் இராணுவப் பயிற்சி பெற வேண்டும். அவர்களுக்கு தமிழ் பேசும் அலுவலர்களே பயிற்சி கொடுக்க வேண்டும்.

ஆணைகள் தமிழிலேயே இருக்க வேண்டும். போதிய

தமிழ் பேசும் அலுவலர்கள் இராணுவத்தில் இல்லை என்றால் முன்னாள் தமிழ்ப் போராளிகளுக்கு இந்தப் பணியை செய்யச் சொல்லி அவர்களுக்கு ஊதியமும் வழங்கலாம். எந்த விதத்திலும் சிங்களம் பேசுவோரோ சிங்கள மொழியிலோ எமது மாணவ, மாணவியருக்குப் பயிற்சி அளிக்கப்படக் கூடாது. பயிற்சியாளர்களுக்குத்

தட்டுப்பாடு இருந்தால் தென்னிந்தியாவிலிருந்து தமிழ் பயிற்சியாளர்களை வரவழைக்கலாம்.

எங்களுக்கு சிரேஷ்ட பள்ளி மாணவ இராணுவப் பயிற்சி

1950களில் றோயல் கல்லூரியில் வழங்கும் போது பயிற்சிகளும் ஆணைகளும் ஆங்கிலத்தில் இருந்தன.

பல இன மாணவர்களை ஆங்கில மொழி ஒன்று சேர்த்தது. எம்முள் சிங்களவர், தமிழர், பறங்கியர், முஸ்லிம்கள், மலாயர், சீனர் எனப் பலதரப்பட்ட மாணவர்கள் இருந்தார்கள்.

ஆனால், எப்பொழுது சிங்களத்தை நாடு முழுவதும் திணிக்க அரசியல்வாதிகள் முடிவெடுத்தார்களோ அப்பொழுதே எமது ஒற்றுமை, ஒன்றிணைந்த செயல்பாடு, நாட்டின் மீதிருந்த பற்றுதல் ஆகியன ஆட்டம் கண்டன.

காலாதி காலமாகத் தமிழ் மொழியைப் பேசி வந்த வடக்குக் கிழக்கும் தமது தனித்துவத்தை இழந்தன.

1958ஆம் ஆண்டில் றோயல் கல்லூரியின் இராணுவப் பயிற்சி பெற்ற மாணவப் படையின் அங்கத்தவராக காலி மைதானத்தில் சுதந்திர தின அணிவகுப்பில் பங்குபற்றியதன் பின்னர் சுதந்திர தின வைபவங்களைப் புறக்கணித்தே வருகின்றேன்.

காரணம் 1956ஆம் ஆண்டின் சிங்களம் மட்டும் சட்டம் தமிழ் பேசும் மக்களின் சுதந்திரத்தைப் பறித்து விட்டது. எமக்கு சிங்கள அரசியல்வாதிகளிடம் இருந்து விடுதலை கிடைத்து நாட்டு மக்கள் சம உரிமையுடன் ஒன்று சேர்ந்து வாழ வாய்ப்பளித்தால்த்தான் தமிழர்கள் சுதந்திர தினத்தைக் கொண்டாடலாம்.

சரத் வீரசேகர, தமிழ் மாணவ மாணவியர், தமிழர்கள் மூலமாகத் தமிழ் இராணுவப் பயிற்சி பெற இணங்குவாரானால் நான் அவரின் கருத்தை வரவேற்பேன்.

சிங்கள மொழி பேசும் அலுவலர்களை அனுப்ப நினைத்தால் எமது மாணவ மாணவியர் அல்லது 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் அனைவரும் பயிற்சிகளைப் புறக்கணிப்பார்கள்.

இராணுவப் பயிற்சி சுய கட்டுப்பாட்டையும் ஒழுக்கத்தையும் மேம்படுத்தும் என்பது

உண்மைதான். ஆனால் இவ்வாறு பயிற்சி பெற்ற இலங்கையின் போர்ப்படையினரே கட்டுப்பாட்டையிழந்து ஒழுக்கத்தை மீறி மனித உரிமை மீறல்களிலும், இனப்படுகொலைகளிலும் ஈடுபட்டனர் என்பது உலகம் அறிந்த விடயம்.

சரத் வீரசேகர, எமது இளைஞர்கள் யுவதிகளைத் தமது இராணுவத்தின்கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரவே இவ்வாறான ஒரு கருத்தை வெளியிட்டுள்ளார் என்பதை நான் அறிவேன்.

சிங்கள அரசியல்வாதிகளும், படையினரும் இணைந்து எவ்வாறு வடக்கு - கிழக்கைத் தம்முடைய முற்றும் முழுவதுமான கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வரவேண்டும், இங்குள்ள குடிப்பரம்பலை எப்படி மாற்ற வேண்டும்,

பிரச்னைகளை ஏற்படுத்தி எமது இளைஞர் யுவதிகளை நாட்டிலிருந்து எவ்வாறு வெளியேற்ற வேண்டும் என்பது சம்பந்தமாக ஆழ ஆராய்ந்து, முடிவுக்கு வந்து தமது முடிவுகளை நடைமுறைப்படுத்தி வருகின்றார்கள்.

அதன் ஒரு அம்சமே இந்தப் பாராளுமன்ற உறுப்பினரின் கருத்துரை. சிங்கள புத்திஜீவிகள் மற்றும் படையினரின் ஆழ்ந்த இன ரீதியான முடிவுகளை முறியடிக்க எமது புத்திஜீவிகள் இதுவரை என்ன செய்துள்ளார்கள்? இந்தப் பாராளுமன்ற உறுப்பினரின் கருத்தாவது எமது மக்கட் தலைவர்களை வரப்போகும் ஆபத்து பற்றி சிந்திக்கத் தூண்டுவதாக!- எனக் குறிப்பிட்டுள்ளார். (எ)






## கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட

# ஊடகவியலாளருக்கு நீதிகோரி போராட்டம்

மட்டக்களப்பு,ஜன.30

கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட உள்ளிட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதிகோரி மட்டக்களப்பில் கண்டனப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

ஊடக அமைப்புக்கள் இணைந்து முன்னெடுத்த இந்தப் போராட்டம் மட்டக்களப்பு காந்திபூங்கா முன்பு நேற்று முற்பகல் 10.30 மணியளவில் ஆரம்பமானது.

உழைக்கும் ஊடக தொழில்சங்க சம்மேளனம், கிழக்கு மாகாண தமிழ் ஊடகவியலாளர்கள் ஒன்றியம் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர்கள் ஒன்றியம் ஆகியவை இணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தன.

இந்தப் போராட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட ஊடகவியலாளர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் பிரசன்னா இந்திரகுமார், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஷ் மற்றும் மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர், உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது, 'காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி வேண்டும்', 'சர்வதேசமே பதில் சொல்', 'காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் எங்கே?', 'படுகொலை செய்யப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடு' போன்ற கோஷங்களை எழுப்பி போராட்டத்தை முன்னெடுத்தனர். (எ)

# இலங்கை மீது சர்வதேச தடைக்கு முஸ்லிம்கள் முயற்சிக்கக்கூடாது

## பைசர் முஸ்தபா ஆலோசனை



கொழும்பு,ஜன.30

கொரோனா வைரஸ் தொற்றால் மரணிப்பவர்களை அடக்கம் செய்யும் உரிமையை சர்வதேச மட்டத்தில் போராட்டங்களை மேற்கொண்டு பெற்றுக்கொள்ள முயற்சிப்பதில் தவறு இல்லை.

ஆனால், இதனைக் காரணமாகக்கொண்டு இலங்கைக்கு சர்வதேச ரீதியில் தடைகளை ஏற்படுத்துவது முஸ்லிம்களின் நோக்கமாக இருக்கக்கூடாது என முன்னாள் அமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவித்தார்.

கொரோனாவால் மரணிக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை எரிப்பதற்கு எதிராக மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கை தொடர்பில் நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

கொரோனாவால் மரணிப்பவர்களின் சடலங்களை அடக்கம் செய்வதால் சுகாதாரப் பிரச்னைகள் ஏற்படுகின்றன எனத் தெரிவிக்கப்படும் கருத்துக்களில் எந்தவித விஞ்ஞான ரீதியிலான ஆதாரமும் இல்லை.

இதனை உலக சுகாதார அமைப்பு உட்பட சர்வதேச ரீதியில் 190 இற்கும் மேற்பட்ட நாடுகள் அனுமதித்திருக்கின்றன. இலங்கை அரசாங்கம் அதனை அனுமதிக்காமல் சுகாதாரத் துறையின் மீது சாட்டி விட்டு காலம் கடத்தி வருகின்றது.

அத்துடன் மரணிப்பவர்களை அடக்கம் செய்வதென்பது முஸ்லிம்களின் மத அடிப்படையிலான உரிமையாகும். அதனைப் பெற்றுக்கொள்ள எங்களால் முடிந்த முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றோம். எனவே சர்வதேச ரீதியில் எமது நாட்டுக்குத் தடைகளை விதிப்பதற்கு முஸ்லிம்கள் முயற்சிக்கக் கூடாது.

ஏனெனில், எதிர்காலத்தில் நாட்டுக்கு சர்வதேச ரீதியில் பாதிப்பு ஏற்பட்டால் அதனால் இங்கு வாழக்கூடிய முஸ்லிம்களுக்கும் அதன் பாதிப்பு ஏற்படுவதுடன் சிங்கள மக்களுடன் இணைந்து வாழும் சமூகம் என்றவகையில் எமக்கு அவப்பெயர் ஏற்படும். அதனால் எமது உரிமையைப் பெற்றுக்கொள்ள சர்வதேச மட்டத்தில் அரசாங்கத்துக்கு அழுத்தங்களை கொடுக்கவேண்டும். மாறாக இலங்கையை சர்வதேச ரீதியில் சிக்க வைப்பது எமது நோக்கமாக இருக்கக்கூடாது- என்றார்.

# சட்டவிரோத மணல் அகழ்வு பொலிஸாரும் உடந்தை செயல்

## கரைச்சி ஒருங்கிணைப்பில் சுட்டிக்காட்டு

கிளிநொச்சி, ஜன. 30

**கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெற்று வரும் சட்டவிரோத மணல் அகழ்விற்கு பொலிஸார் உடந்தையாக இருக்கின்றனர் என்று கரைச்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் பகிரங்கமாக குற்றம்சாட்டப்பட்டது.**

நேற்று நடந்த கரைச்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பில் பொது அமைப்புகள் கேள்வி எழுப்பினர்.

மேலும், சட்டவிரோத மண் அகழ்வுக்கு பொலிஸார் துணை போகிறார்கள் எனவும், பொலிஸாரின் கனரக வாகனங்கள் மணல் அகழ்வில் ஈடுபடுகின்றனர். இது சம்பந்தமான ஆதாரங்கள் தம்மிடம் உண்டு என்றும் பொது அமைப்புகள் தெரிவித்திருந்தனர்.

இதனால், இராணுவத்தினரிடம் சட்ட விரோத மணல் அகழ்வை தடுக்கும் நடவடிக்கையை ஒப்படைக்குமாறும் தெரிவிக்கப்பட்டது.

இது குறித்து பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் கலந்துகொண்டிருந்த பொலிஸார் கருத்து தெரிவிக்கையில், மணல் அகழ்வு இடம்பெறும் பட்சத்தில் அவர்களை நாம் கைது செய்ய பொலிஸ் அதிகாரி, பொலிஸ்மா அதிபரின் அனுமதி வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், கிளிநொச்சி மாவட்டம் பெரிய பிரதேசம் எனவும் வெவ்வேறு இடங்களில் மணல் அகழ்வு இடம்பெறும் பட்சத்தில் குறைந்தளவிலான பொலிஸாரை வைத்து தம் நடவடிக்கை எடுக்க முடியாது என்றும் தெரிவித்தனர். (ஐ)



# தியாகி முத்துக்குமார் நினைவுதினம் யாழில்!

யாழ்ப்பாணம், ஜன. 30

தியாகி முத்துக்குமாரின் 12ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் தமிழாராய்ச்சி படுகொலை நினைவுத் தூபியின் அருகே தமிழ்த் தேசிய பண்பாட்டு பேரவையின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

வன்னி இறுதிப் போர் உச்சம் பெற்றிருந்தபோது, போரை நிறுத்த வலியுறுத்தியும் இனப்படுகொலைக்கு இந்திய அரசாங்கம் துணை போவதைக் கண்டித்தும் தமிழ்நாட்டை சேர்ந்த கு.முத்துக்குமார் 2009 ஜனவரி 29ஆம் திகதி தனக்குத் தானே தீ மூட்டி உயிர் நீத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-3)

# கட்டாரிலிருந்து வந்த குருவிகளை தனிமைப்படுத்தாத நபர் கைது!

கட்டாரிலிருந்து, செல்லப் பிராணிகளாக வளர்க்கும் ஒரு தொகை குருவிகளை எடுத்து வந்துள்ள நபர் ஒருவர் அதில் 20 குருவிகளை தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்கு உட்படுத்தாமை தொடர்பில், பொரலஸ்கமுவ பகுதியைச் சேர்ந்த நிறுவன உரிமையாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

1992 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க விலங்கு நோய்கள் (திருத்தச்) சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் குறித்த நபரைக் நீர் கொழும்பு வலய குற்றத் தடுப்புப் பிரிவினர் கைது செய்ததாக பொலிஸ் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹன கூறினார்.

இது குறித்து மேலும் அறிய வருவதாவது:

கடந்த ஜனவரி 7 ஆம் திகதி கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக 62 குருவிகளை நபர் ஒருவர் கட்டாலிரிலிருந்து எடுத்து வந்துள்ளார். பொரலஸ்கமுவ பகுதியைச் சேர்ந்த நிறுவனம் ஒன்றின் உரிமையாளரே செல்லப் பிரானிகளாக வளர்க்கப்படும் குறித்த குருவிகளை எடுத்து வந்துள்ளார்.

1992 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க விலங்கு நோய்கள் (திருத்தச்) சட்டத்தின் பிரகாரம், வெளிநாடுகளில் இருந்து பிராணிகளை எடுத்து வரும் போது, மிருக வைத்தியரின் ஆலோசனைக்கு அமைய அவை, கட்டுநாயக்கவில் உள்ள பிரத்தியேக இடத்தில் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்கு உள்ளாக்குதல் வேண்டும்.

இந்நிலையில் குறித்த 62 குருவிகளில் 42 குருவிகளை உரிய முறையில் தனிமைப் படுத்தியுள்ள குறித்த நபர் 20 குருவிகளை தனிமைப்படுத்தல் செயற்பாடுகளுக்கு உட்படுத்தாமல் எடுத்து சென்றுள்ளார்.

இந்நிலையிலேயே இது குறித்து விசாரணை நடாத்திய நீர்கொழும்பு வலய குற்றத் தடுப்பு பிரிவினர் குறித்த சந்தேக நபரைக் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபரை 1992 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க விலங்கு நோய்கள் (திருத்தச்) சட்டத்தின் கீழ் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

# யானைத் தந்தங்கள், துப்பாக்கியுடன் முல்லைத்தீவில் இருவர் நேற்று கைது!

முல்லைத்தீவு, ஜன. 30

முல்லைத்தீவில் இரு யானைத் தந்தங்கள் மற்றும் நாட்டுத் துப்பாக்கியுடன் இருவரரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

முல்லைத்தீவு களிகாட்டுப் பகுதியில் சில நாட்களுக்கு முன்னர் உயிரிழந்த நிலையில் யானை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. அந்த யானை கண்டுபிடிக்கப்பட்டபோது, பல நாட்களுக்கு முன்னரே உயிரிழந்தமைக்கான அடையாளம் காணப்பட்டது.

அத்துடன், அதன் தந்தத்திற்காக அது கொல்லப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்பட்டது. ஏனெனில், தந்தம் இருந்த இடங்களில் அது அறுக்கப்பட்டமைக்கான அடையாளங்களும் தலையில் துப்பாக்கி சூட்டால் ஏற்படுத்தப்பட்ட காயங்களும் காணப்பட்டன.

இது தொடர்பில் பொலிஸாரும், வன ஜீவ



ராசிகள் திணைக்களத்தினரும் தீவிர விசாரணைகளை மேற்கொண்டனர்.

இந்நிலையிலேயே நேற்று இரு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர். அத்துடன் அவர்களிடம் இருந்து இரு தந்தங்களும், நாட்டுத் துப்பாக்கி ஒன்றும் கைப்பற்றப்பட்டன.

அவர்களிடம் முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# மன்னார் மாவட்டத்திற்கு 1,280 தொற்று தடுப்பூசிகள்

மன்னார், ஜன. 30

இந்திய அரசாங்கத்தால் இலங்கைக்கு வழங்கப்பட்ட கொவிட்-19 தடுப்பூசிகள் மன்னார் மாவட்டத்தில் இன்று சனிக்கிழமை சுகாதார துறையினருக்கு முதன்முதலாக செலுத்தப்படவுள்ளன என்று மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,


இந்திய அரசாங்கத்தினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட கொவிட்-19 தடுப்பூசிகள் மன்னார் மாவட்டத்திற்கும் வழங்கப்பட்டுள்ளது. முதல் கட்டமாக 1280 கொவிட்-19 தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளது.

அவற்றை எமது சுகாதார துறையினருக்கு முதல் கட்டமாக செலுத்தப்படவுள்ளது. 2 ஆம் கட்டமாக வழங்கப்படும் கொவிட்-19 தடுப்பூசிகள் 60 வயதிற்கு மேற்பட்ட மக்களுக்கு செலுத்தப்படும் என அவர் தெரிவித்தார்.

-இதேவேளை மன்னார் மாவட்டத்தில் தற்போது வரை 170 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் 153 பேர் இந்த மாதம் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார்.



# 200 முதியவர்களை பலியெடுத்தது தொற்று



கொழும்பு, ஜன. 30

இலங்கையில் கொரோனா தொற்றால் உயிரிழந்தவர்களில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களின் எண்ணிக்கை 200ஐ கடந்துள்ளது.

மினுவாங்கொடை, பேலியகொடை இரட்டைக் கொத்தணி தொற்று பரம்பல் ஏற்பட்டதன் பிற்பாடு தொற்று எண்ணிக்கையும் பலி எண்ணிக்கையும் சடுதியாக அதிகரித்து வருகின்றது.

நேற்றுமுன்தினம் கொரோனா தொற்றால் உயிரிழந்த 7 பேரும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இயைடுத்தே இந்த எண்ணிக்கை 200ஆக உயர்ந்துள்ளது.

கொரோனா தொற்றால் நாட்டில் இதுவரை 297 பேர் உயிரிழநதனர். இதில், 284 மரணங்கள் இரண்டாம் அலை ஆரம்பமானதை தொடர்ந்து ஏற்பட்ட மரணங்களாகும் என கொவிட் 19 பரவலை தடுக்கும் தேசிய செயற்பாட்டு மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதன்படி, இரண்டாம் அலையில் பதிவான மரணங்களில் 200 பேர் 60 வயதிற்கும் அதிகமானோர் என தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும், நடுத்தர வயதுடைய 72 பேரும் கொவிட் தொற்றுக்கு உயிரிழந்தனர். 31 முதல் 40 வயதிற்குட்பட்ட 6 பேரும் 10 முதல் 30 வயதிற்குட்பட்ட 5 பேரும் 10 வயதுக்கு குறைவான ஒரு கொவிட் மரணமும் பதிவாகியுள்ளன. (ஐ)

# பருத்தித்துறை - கொழும்பு பஸ் சேவை மீளவும் ஆரம்பம்

வடமராட்சி, ஜன. 30

பருத்தித்துறை - கொழும்பு பஸ் சேவை மீண்டும் ஆரம்பமாகியுள்ளது. தினமும் காலை 5.15 மணிக்கு பருத்தித்துறை பேருந்து நிலையத்தில் இருந்து புறப்படும் பஸ் கொடிகாமத்தை அடைந்து அங்கிருந்து அநுராதபுரம் - புத்தளம் ஊடாக கொழும்பை சென்றடையும்.

இதேபோன்று கொழும்பில் இருந்து தினமும் காலை 8.30 மணிக்கு புறப்படும் பஸ் இதே பாதை வழியில் பருத்தித் துறையை வந்தடையும் என்று தெரிவிக்கப்பட்டது.

கொரோனா தொற்று அச்சம் காரணமாக கடந்த ஆண்டு மார்ச் மாதம் நிறுத்தப்பட்ட இந்த பஸ் சேவை கடந்த வாரம்




முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எனினும், முன்னர் பகல், இரவு சேவையாக இது இடம்பெற்றது. இந்நிலையில், தற்போது பகல் சேவை மட்டுமே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இரவு சேவையும் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-2)

ஈழநாடு
Eelanadu

## கொழும்புத் துறைமுகத்தை எவருக்கும் ஒருபோதும் கொடுக்க அனுமதியோம்

### முன்னாள் அமைச்சர் டியூ குணசேகர

கொழும்பு, ஜன. 30

கொழும்பு துறைமுகம் நாட்டின் பொருளாதார மையம். பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டார நாயக்க உயிரை தியாகம் செய்து பாதுகாத்த இதனை எந்த நாட்டுக்கும் பலிகொடுக்காமல் பாதுகாத்துக் கொள்ளவேண்டும் என முன்னாள் அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்தார்.

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்திய நிறுவனம் ஒன்றுக்கு முதலீடாக வழங்க அரசாங்கம் மேற்கொண்டுவரும் நடவடிக்கை தொர்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். கொழும்பு துறைமுகம் என்பது எமது நாட்டின் பொருளாதார மையம் என்பதுடன் தேசிய சொத்தாகும். அதனை பாதுகாப்பது எமது கடமை.

மேலும் இந்தியாவில் அம்பானி மற்றும் அதானிக்கு எதிராக 25மாநிலங்களிலும் விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார்கள். அவர்களில் ஒருவருக்கே எமது அரசாங்கம் கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை வழங்க நடவடிக்கை எடுத்து வருகின்றது.

துறைமுகத்தை பெற்றுக்கொள்ள இந்திய பிரதமர் மோடி, அதானியை பெயரிட்டு அனுப்பி இருக்கின்றார். இந்தியா இன்று அமெரிக்காவுடன் வெளிப்படையாகவே தொடர்புகளை மேற்கொண்டு வருகின்றது. பிளவுபடாத கொள்கையில் இருந்து விலகி இந்தியா அமெரிக்காவுடன் ஏகாதிபத்தியவாத போக்கை ஆரம்பித்திருக்கின்றது. அதனால் இந்த நிலைமைக்கு இடமளிக்கக்கூடாது -என்றார். (ஐ)

## வழிபாட்டு சின்னங்கள் காணாமல் போனமை உறுதிப்படுத்தப்பட்டது

### ரவிகரன் தெரிவிப்பு



முல்லைத்தீவு, ஜன. 30

**குருந்தூர்மலையில் தமிழரின் வழிபாட்டு அடையாளங்கள் காணாமல் ஆக்கப்பட் டமை உண்மையானது என்ற விடயத்தை பொலிஸாருக்கு தாம் நேரடியாக உறுதிப்படுத்தினார் என்று வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் து. ரவிகரன் கூறினார்.**

குருந்தூர்மலையிலிருந்த தமிழர்களின் வழிபாட்டு அடையாளங்கள் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பில் ரவிகரன் அண்மையில் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றை அண்மையில் செய்திருந்தார்.

இந்நிலையில், அவை காணாமல் போயின என்பதை உறுதிப்படுத்த தாம் நேரடியாக சென்று பார்வையிடும் போது அங்கு வரவேண்டும் என்று கூறியிருந்தனர்.

இதன் பிரகாரம் நேற்று பொலிஸார் குருந்தூர் மலைக்கு சென்றபோது முறைப்பாட்டாளரான ரவிகரனும் அங்கு சென்றிருந்தார். அவருடன், கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன் அவர்கள் ஆகியோர் குருந்தூர் மலைக்குச் சென்று அங்கு தமிழர்களின் வழிபாட்டு அடையாளங்கள் காணாமல் ஆக்கப்பட்டமையை பொலிஸாருக்கு உறுதிப்படுத்தினர்.

அப்போது குருந்தூர் மலைப் பகுதிக்குள் முறைப்பாட்டாளரான ரவிகரன் மற்றும் அவருடன் மேலும் ஒருவர் மாத்திரமே செல்ல பொலிஸாரால் அனுமதிக்கப்பட்டனர். அத்துடன் காணொலி, ஒளிப்படம் எடுப்பதையும் அவர்கள் தடை செய்திருந்தனர். இதன் பின்னர் அவர்கள் தமது விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர். (ஐ)

## வவுனியாவில் தடுப்பூசி ஏற்றும் பணிகள் இன்று!

### 1700 தடுப்பு மருந்துகள் வந்தன

வவுனியா, ஜன. 30

வவுனியா வைத்தியசாலைகளூடாக சுகாதாரத் துறையினர் மற்றும் மருத்துவ சேவையாளர்களிற்கு வழங்குவதற்காக 1700 கொவிட் -19 தடுப்பூசி மருந்துகள் நேற்று வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. இந்தியாவினால் நன்கொடையாக வழங்கப்பட்ட கொவிட்-19, “கோவிஷீல்ட்” தடுப்பூசிகள் வடக்கு மாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களிலும் மருத்துவர்கள், தாதியர்கள், மருத்துவ சேவையாளர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் ஊழியர்களுக்கு ஏற்றும் பணி இன்று தொடக்கம் மூன்று நாள்களுக்கு முன்னெடுக்கப்படவுள்ளது.

இதற்காக, வவுனியா மாவட்டத்துக்கு 1700 தடுப்பூசி மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன. இதையடுத்து அதைச் செலுத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ஐ)

## 30 வருடங்கள் திருத்தப்படாத வீதிகளுக்கு விழவு எப்போது?

### நெடுந்தீவு மக்கள் கவலை!



யாழ்ப்பாணம், ஜன. 30

நெடுந்தீவின் பிரதான வீதி உட்பட முக்கியமான 14 வீதிகள் கடந்த 30 வருடங்களுக்கும் மேலாக திருத்தப் பணிகள் எதுவுமின்றி உள்ளன. இதனால், குண்டும் குழியுமாகக் காணப்படும் அந்த வீதிகளால் தாம் பெரும் இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றனர் என்று அப்பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தின் தீவுக் கூட்டங்களில் தொலைவில் இருப்பதும் மிகப்பெரியதுமான தீவு நெடுந்தீவு. இங்கு சுமார் 4,800இற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர். பல கட்டமைப்புகள் தனியாக இருந்தபோதிலும் இந்தத் தீவில் வீதிகள் எவையும் கடந்த 30 வருடங்களுக்கும் மேலாகத் திருத்தப்படவில்லை என்று அப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

நெடுந்தீவு பிரதேசத்தின் இறங்குதுறையில் இருந்து பெரியதுறை வரை செல்லும் 9.6 கிலோமீற்றர் நீளமான வீதியே பிரதானமானது. இந்த வீதி வழியாகவே பஸ் சேவையும் இடம்பெறுகின்றது. இந்த வீதிகூட கடந்த 30 வருடங்களுக்கும் மேலாக திருத்த வேலைகள் எதுவுமின்றி குண்டும் குழியுமாகவே காணப்படுகின்றது.

இது தவிர, வெள்ளை வீதி (6 கிலோமீற்றர் நீளம்), சாரப்பிட்டி வீதி (5 கிலோமீற்றர் நீளம்) உட்பட 13 வீதிகளும் கூட எந்தத் திருத்த வேலைகளும் இன்றி காணப்படுகின்றன. இந்த வீதிகள் அனைத்தும் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு உட்பட்டவை என்பதுடன் அவர்களிடம் இந்த வீதிகளை திருத்தித் தருமாறு பல தடவைகள் கோரிக்கை விடுக்கப்பட்டபோதும் இதுவரை எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

குண்டும் குழியுமாகக் காணப்படும் இந்த வீதிகள் மழைகாலத்தில் தண்ணீர் நிறைந்து குளம் போல காட்சியளிக்கும். இந்த வீதிகள் வழியே வாகனங்கள் பயணிக்க முடியாத நிலையே காணப்படும். இதனால் அக்காலத்தில் அவசர தேவை களுக்குக் கூட பயணிக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

தேர்தல் காலத்தில் வரும் அரசியல்வாதிகள் வீதிகளை திருத்தித் தருகிறோம் என்று வாக்குறுதியளித்தாலும் தேர்தல் முடிந்ததும் அவை காற்றில் பறந்து விடுகின்றன என்று மக்கள் கவலையுடன் தெரிவித்தனர்.

ஒழுங்கான வீதிகள் இன்மையால் தமது அன்றாடப் பணிகள் பெரிதும் பாதிக்கப்படுவதுடன், நோயாளிகள், கர்ப்பவதிப் பெண்கள், முதியவர்கள் என இந்த வீதிகளால் பயணிக்கும் பலரும் பெரும் அசௌகரியங்களையும் இன்னல்களையும் எதிர்கொள்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

எனவே, இது விடயத்தில் உரிய நடவடிக்கை எடுத்து தமக்கு விடிவை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று நெடுந்தீவு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

அருந்ததி
இணைய திருமண சேவை

மணமகன் விபரம்

15892 |வே|1975
Seperated|கொழும்பு-06| இந்து
It Engineer|Sri lanka|
செவ் : 02 |மகம்(சிம்மம்)|177செ.மீ

15883|மு |1976
Divorced| மஸ்கெலியா| இந்து
Coordinator | Qatar|
பூசம்கடகம்)|171செ.மீ

16000| வே|1979
வல்வெட்டித்துறை| இந்து|Uk|
Business|பூசம்(கடகம்) |170செ.மீ

15934 |வே |1980
யாழ்நகரம்| இந்து |செவ் : 12
Mechanical|Sri lanka|
சதயம்(கும்பம்)|171செ.மீ

15757| வே |1981
யாழ்நகரம்| இந்து | செவ் : 04
Mechanical| UK
கேட்டை(விருச்சிகம்)| 158செ.மீ

மணமகள் விபரம்

16042| செ|1977
Divorced|கண்டி| இந்து
Nurse| Sri lanka| சூ.செவ் : 02
பூராடம்(தனுசு) | 168செ.மீ

16117| வே |1978
பருத்தித்துறை|இந்து |Sri Lanka|
பூரம்(சிம்மம்)|161செ.மீ

16135| வே |1979
நல்லூர்| இந்து |செவ் : 02
Computer Typist| Sri lanka|
கார்த்திகை(மேடம்) |158செ.மீ

15877| வே|1981
ஏளாலை|Sri Lanka|சூ.செவ் : 09
Insurance Agent | இந்து
மகம் (சிம்மம்)| 168செ.மீ

16033| வே |1981
சாவகச்சேரி| இந்து | செவ் : 07
Grama Sevaka|Sri lanka|
பூசம்(கடகம்) |155செ.மீ

20, கே.கே.எஸ் வீதி கொக்குவில் யாழ்ப்பாணம்
0777 164 524 www.arunthathee.com

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் : வழங்குபவர் திருமதி .கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ்அன்ரன் கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : ரிக் ரொக்
11.00 மணி : மைதானம்-வாராந்த விளையாட்டு நிகழ்வுகளின் தொகுப்பு

**பகல்**
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி
1.30 மணி : வீக் என்ட் மூவி
4.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : அந்தி மந்தாரை (நேரலை)
6.00 மணி : எது சரி? எது பிழை



**இரவு**
7.00 மணி : சுப்பர் குறூப்



8.00 மணி : இரவுச் செய்திகள்
10.00 மணி : யாவரும் கேளீர்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் சந்தானம் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : டொப் 20
11.00 மணி : ரிவைன்ட் ராகங்கள்

**பகல்**
12.00 மணி : நட்சத்திரம்
1.00 மணி : மஞ்சள் வெயில் மாலையிலே (நேரலை)
3.00 மணி : எங்கேயும் எப்போதும்
4.00 மணி : வீக் என்ட் எக்ஸ்ப்றஸ் (நேரலை)
5.00 மணி : என்றென்றும் இசை

**இரவு**
7.00 மணி : பாட்டு தலைவர்கள்
8.00 மணி : பச்சை கிளி முத்துச்சரம்
9.00 மணி : அண்பிளக் சோ
10.00 மணி : பாடும் நிலா

**காலை**
5.15 மணி : தரம் 06 - கணிதம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - விஞ்ஞானம்
7.30 மணி : தரம் 09 - தமிழ்
8.15 மணி : தரம் 10 - விஞ்ஞானம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) ஊடகம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப் பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) மறு ஒளிபரப்பு
2.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
3.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
4.00 மணி : தரம் 5 சுற்றாடல்
5.00 மணி : தரம் 5 கணிதம்
6.00 மணி : தரம் 6-9 ஆங்கிலம்
7.00 மணி : பொது சிங்களம்
7.30 மணி : உயர்தரம் கணிதம் விஞ்ஞானப்பிரிவு

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : சின்மய சிந்தனை
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : யாழ்ப்பாணம் புங்குடுதீவு மேற்கு அரியநாயகன்புலம் வீரகத்தி விநாயகர் ஆலய தீர்த்தத்திருவிழா
10.00 மணி : ஐயப்பன் பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி :திரையில் பக்தி
12.30 மணி : யாழ்ப்பாணம் நவாலி அட்டகிரி கந்தசுவாமி கோவில் திருவிழா
6.00 மணி :கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
08.00 மணி : யாழ்ப்பாணம் புங்குடுதீவு மேற்கு அரியநாயகன்புலம் வீரகத்தி விநாயகர் ஆலய தீர்த்தத்திருவிழா

**காலை**
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : மாதா மன்றாட்டு மாலை
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
11.00 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : திருகோணமலைத்திருப்பலி
1.00 மணி : மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி : நற்சிந்தனை
3.00 மணி : மறை வகுப்பு
4.30 மணி : திருகோணமலை திருப்பலி
5.30 மணி : பாடல்

**காலை**
6.00 மணி : தர்ஜீமத்துல் குர்ஆன்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இறை தென்றல்
8.00 மணி : குத்துபா பிரசங்கம்
8.30 மணி : அல் உழ்கிய்யா
9.30 மணி : ஹஜ் ஆவணப்படம்
10.00 மணி : சிறப்பு நேரலை வாழ்த்து நிகழ்ச்சி
12.00 மணி : பிறை பிரசங்கம்

**பகல்**
1.00 மணி : சிறப்பு திரைப்படம்
3.00 மணி : இசை மழை
4..00 மணி : குட்டீஸ் ஈத் கொண்டாட்டம்
5.00 மணி : கவிதாரங்கம்
6.00 மணி : பத்தாம் பிறை கலந்துரையாடல்

**இரவு**
7.00 மணி : யார் இவர்?
10.30 மணி : கலந்துரையாடல்

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 30.01.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.